# இந்து இளைஞன் (ஐஇ)
# THE YOUNG HINDU (UK)



**அமரர் க. சிவராமலிங்கப்பிள்ளை
ஞாபகார்த்தமாக
இந்து இளைஞன் (ஐஇ) 2005இன்
சிறப்பு வெளியீடு**

"ஆசானே! அகத்தில் இருத்தி வணங்குகிறோம்" - இந்துவின் மைந்தர்கள்

15.07.2005 அன்று இலண்டனில் இருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்றுக்காக அமரர் அவர்கள் எழுதிய ஆதங்கம் நிறைந்த ஒரு வேண்டுகோள்.

# நயத்தக்க நாகரீகம் பேணி முத்தமிழ் காப்போம், வளர்ப்போம் வாரீர்!

## ஒன்றுக்கு ஒன்று

செய்தி எந்தச் சுவையை ஊட்டியது? ஒன்பான் சுவையில் இது எது? பத்தாவது சுவை என்று வைத்துக் கொள்வோம். அப்படி ஒன்று இருந்தால்!

ஒரு காதில் தோடு! அணிந்து மகிழவும், தையல் கடையில் எஞ்சிய துணித்துண்டுகளைப் பொருத்தித் தைத்தது போன்ற சேட் அணிவதும் அவரவர் விருப்பம், மனித உரிமை என்று கருதி கண்டு கொள்ளாத இந்தக் காலத்தில், குடுமி முடிவது தவறு எனக்கருதுவதோ, பிராமணர் அல்லாத பிராமணக் கோலம் எனக் கொள்வதோ ஒரு குடுமி முடிதல் தான்.

புலம் பெயர்ந்து வாழும் தமிழரை குறைசொன்னது குற்றம்? குற்றம் குற்றமே.

எம்மை இழந்து விட்டோம் என்றகவலை ஆதங்கம் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் சென்ற இடமெல் லாம் செழிப்புடன் காக்கும் சீர்மையை போற்றவும் வணங்கவும் என்றும் நாம் பின் நின்றதில்லை.

கொஞ்சம் அதிகம் தான்

தொப்பி அளவானால் போட்டுக் கொள்ள யாரும் குறை சொல்லார்.

கொடுக்கப்பட்ட விருதுகள் பல நூற்றில் ஒன்றே கம்பவாரிதி

கொதிப்பு ஏன் ஐயா?

கம்பன் கழகம் பதியப்பட்ட ஒரு நம்பிக்கை நிதியம். கலை, தமிழ், பண்பாடு பேணிக்காக்க நிறுவிய ஒரு அமைப்பு.

நிறுவன இயக்குனர் சபையில் ஒரு உறுப்பினராகக் கூட இல்லாத இ. ஜெயராஜாவிற்கு ஏன் இந்தப் பெருமை தருகிறீர்கள்?

கம்பன் கழகம் யாரையும் தூக்கித்திரிவதும் இல்லை, போட்டுமிதிப்பதும் இல்லை. வியத்தலும் இழித்தலும் இதன் தொழில் அல்ல.

வெள்ளவத்தையில் கம்பன் கழகத்திற்கு இல்லம் உண்டு. இது பொதுச் சொத்து. தமிழர் சிந்தையில் ஊறிய தமிழ் ஆர்வத்தால் உயர்ந்து நிற்கும் தமிழ்ச்சொத்து.

கம்பனுக்கு வசைபாடல் பழைய கதை பாடியவர்கள் பெரிய வர்கள், இருந்தும் எடுபடவில்லை.

கம்பன் மகாகவி என்று ஒத்துக் கொண்டீர்களே இதுதான் ஐயா! தமிழ் நெஞ்சம் - வாழ்க பல்லாண்டு. இராமனும் இராவணனும் வான்மீகி வார்த்த மூர்த்திகள். அவற்றை தமிழ் செய்தவன் கம்பன் - ஒரு பெரும் வம்பன்.

புலவர் குழந்தையின் கீமாயணத்தையும் கம்பன் இராம காதையும் ஒரு முறை ஒப்பீட்டுரீதியில் படித்துப் பாருங்கள் பயன் தரும்.

கருத்து மேடைக்குக் கம்பன் காளைகள் என்றும் சளைக்க மாட்டார்கள்.


நயத்தக்க நாகரீகம் பேணி முத்தமிழ் காப்போம், வளர்ப்போம் வாரீர?

வணக்கம்

*க. சிவராமலிங்கம்*
*காவலர்*
*அகில இலங்கைக் கம்பன் கழகம்.*

இதுவே இறுதியக தமிழ் உலகுக்கு எழுதப்பட்ட அன்னாருடைய எழுத்தாக நம்பப்படுகிறது.

# இந்து இளைஞன் (ஐஇ)
# THE YOUNG HINDU (UK)



அமரர் க. சிவராமலிங்கப்பிள்ளை
ஞாபகார்த்தமாக
இந்து இளைஞன் (ஐஇ) 2005இன்
சிறப்பு வெளியீடு

Special Supplementary Edition of
The Young Hindu (UK) 2005
in memory of our beloved teacher
Late Sivaramalingapillai

யாழ். இந்துக் கல்லூரி ஒன்றியம் (ஐஇ)
JAFFNA HINDU COLLEGE ASSOCIATION (UK)

| | |
|---|---|
| **Title:** | Special edition of Young Hindu (UK)<br>in memory of the Late Sivaramalinghampillai. |
| **ISSN No.** | ISSN 1745-705X |
| **Released at** | Ealing Kanagathurgai Amman Temple<br>5 Chappel Road<br>West Ealing<br>London W13 9AE UK |
| **Released on** | 11/09/2005 |
| **Released by** | Jaffna Hindu College Association (UK)<br>Registered charity 1099893<br>88 Summerhouse Way<br>Abbots Langley<br>Hertfordshire WD5 0DX<br>United Kingdom<br>Tel : 01923469832<br>Email : jhcauk@hotmail.com<br>Web : www.jhcauk.org |
| **Number of pages** | 56 |
| **Design & Print** | Print Tone Ltd. |

அறிவு தந்து அவைதனில் அரங்கேற்றி
அவனியில் சிறக்க வைத்த
ஆசிரியப் பெருந்தகைக்கு
இதய அஞ்சலிகள்

- ஆறு திருமுருகன்



# கல்லூரிக் கீதம்

வாழிய யாழ்நகர் இந்துக்கல்லூரி
வையகம் புகழ்ந்திட என்றும் (வாழி)

இலங்கை மணித்திரு நாட்டினில் எங்கும்
இந்து மதத்தவர் உள்ளம்
இலங்கிடும் ஒருபெருங் கலையகம் இதுவே
இளைஞர்கள் உளம் மகிழ்ந் தென்றும்

கலைபயில் கழகமும் இதுவே பல
கலைமலி கழகமும் இதுவே – தமிழர்
தலைநிமிர் கழகமும் இதுவே!

எவ்விடமேகினும் எத்துயர் நேரினும்
எம்மன்னை நின்னலம் மறவோம்
என்றுமே என்றுமே என்றும்
இன்புற வாழிய நன்றே
இறைவன தருள்கொடு நன்றே!

ஆங்கிலம் அருந்தமிழ் ஆரியம் சிங்களம்
அவைபயில் கழகமும் இதுவே
ஓங்குநல் லறிஞர்கள் உவப்பொடு காத்திடும்
ஒருபெருங் கழகமும் இதுவே!
ஒளிர்மிகு கழகமும் இதுவே!
உயர்வுறு கழகமும் இதுவே!
உயிரன கழகமும் இதுவே!

தமிழரெம் வாழ்வினிற் தாயென மிளிரும்
தனிப் பெருங் கலையகம் வாழ்க!
வாழ்க! வாழ்க! வாழ்க!

தன்னிகர் இன்றியே நீடு
தரணியில் வாழிய நீடு.

## யாழ். இந்துக்கல்லூரி ஒன்றியமும் அமரர் சிவராமலிங்கப்பிள்ளை அவர்களும்

**திரு. ந. ஜெயசீலன்**

தலைவர்

யாழ். இந்துக் கல்லூரி ஒன்றியம்

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் கூடி யாழ். இந்துக்கல்லூரி ஒன்றியம் (ஐ.இ) என்ற அமைப்பினை ஆரம்பித்த போது எமக்கு தனது மனமார்ந்த ஆசியினை வழங்கியவர்களில் அமரர் சிவராமலிங்கப்பிள்ளை அவர்கள் முக்கியமானவர். நாம் எமது ஒன்றியத்தின் நோக்கம், கொள்கைகள், செயற்பாடுகள் பற்றி ஆசிரியர் அவர்கட்கு ஒரு கடிதமூலம் எழுதி அனுப்பினோம். யாழ். இந்து மாணவனாக எம் கல்லூரிக்கு மட்டுமன்றி எமது தாய் மண்ணுக்கும் எம்மாலான உதவிகளை புரிய வேண்டும் என்ற ஒன்றியத்தின் உன்னத குறிக்கோளினை தனது கைப்பட எழுதிய கடித மூலம் பாராட்டி, ஆசிர்வதித்ததினை நாம் இவ்விடத்தில் நினைவு கூர விரும்புகின்றோம்.

எம் உறுப்பினர்கள் யாழ். செல்லும்போது ஆசிரியர்கள் அவர்களை சந்திக்கத் தவறுவதில்லை. அப்போதெல்லாம் எம் ஒன்றியத்தின் செயற்பாடுகள் பற்றி மிகவும் உற்சாகமாக கேட்டு அறிந்து கொள்வார். யாழ். இந்து மாணவர்களின் பரந்த மனப்பான்மையினையிட்டு மிகவும் பெருமிதமடைவார்.

கடந்த வருடம் (2004) ஆசிரியர் அவர்கள் இலண்டன் வந்திருந்தார். அவர்களை அழைத்து இராப்போசனம் வழங்கி கௌரவித்தோம். அந்நிகழ்வில் ஆசிரியர் அவர்கள் தம் மாணாக்கர்கள் தம்மீது எவ்வளவு அன்பும், பண்பும் கொண்டுள்ளார்கள் என்பதையிட்டு மிகவும் உணர்ச்சிவசப்பட்டிருந்தார். யாழ். இந்து ஒன்றியம் (ஐஇ) தொடர்ந்தும் தமது பணியினை செயற்படுத் வேண்டும் என்றும் யாழ். இந்து மாணவர்கள் ஒற்றுமையாக தமது பணியினை செயற்படுத்துவதன் மூலமே யாழ். இந்துக் கல்லூரிக்கு பெருமை தேடித்தரமுடியும் எனவும் வலியுறுத்தியிருந்தார்.

எல்லாவற்றிற்கும் மேலாக தமிழுக்கும், சைவத்திற்கும் யாழ். இந்துக்கல்லூரிக்கும் அன்னாரின் சேவை அளவிடற்கரியதென்று அன்னார் ஆற்றிய சேவை பற்றி எமது நண்பர்கள் இவ் இந்து இளைஞனில் எழுதியுள்ளார்கள்.

அவரது ஆத்ம சாந்தியடையவும், அவரது குடும்பத்தினருக்கு எமது ஆறுதலையும் உலகமெலாம் பரந்து வாழும் யாழ். இந்து பழைய மாணவர்களுடன், யாழ். இந்து ஒன்றியமும் எல்லாம் வல்ல யாழ். இந்துக் கல்லூரி ஞானவைரவப் பெருமானை வேண்டி நிற்கிறது.

# ஆசிரியர் எமது ஒன்றியத்திற்கு தந்த ஆசிச்செய்தி

[illegible]
க. சிவராமலிங்கம் B. A. (Madras)
[illegible]

"[illegible]"
28, [illegible]
[illegible]
யாழ்ப்பாணம்.
20-11-2002.

அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய ஜெயப்பிரகாசம்,
என் நல்வாழ்த்துக்கள்.

தங்கள் 24-10-02 மடல் கிடைத்தது. நன்றி. பரந்த உணர்வைத் தொட்டு உண்மையான 'இந்துவாசம்' தாங்கள் வெளியிடத் தீர்மானித்தமை வரவேற்புக்குரியதே.

ஒரு காலகட்டத்தில் - சரியாகத் தெரியவில்லை - அமரர் பி.S. [illegible] 'Hinduvites' என்ற பெயரில் ஒரு நிறுவனம் இயங்கியது.

யாழ் பழைய மாணவர்களுக்குத் தொடர்பு [illegible] பழைய மாணவர்களால் தொடங்கப்பட்டது.

அக்காலத்தில் அட்வகேட் [illegible] யாழ்ப்பாணத்தில் இருந்து [illegible] நான். அது தொடர்ந்து [illegible] தெரியவில்லை.

எவ்வாறாயினும், கல்லூரித் தாயின் [illegible] கொண்டு தங்கள் ஒன்றியம் தொடர்ந்து செயல்படுகிறது எனத் தெரியும்போது மகிழ்ச்சியடைகிறேன்.

[illegible]

கொடுப்பதே அன்றி வேற்றுமையில்லை

இந்துவின் மைந்தர்கள். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற தமிழ் வழி நடத்தல் போகின்றது.

எல்லாவற்றிலும் இறைவனைக் காண்பதும் இறைவனில் எல்லாவற்றையும் காண்பதும் இந்து தர்மம்.

தங்கள் ஒன்றியத்தின் செயற்பாடுகள் வெற்றி பெறவும், இந்துவின் புகழ் [illegible] முன்னேற்றம் வாழ்த்தி மகிழ்கிறேன்.

அன்புடன்
சிவராமலிங்கம்

## மறைந்தும் மறையாத பேராசான்!

சீசெல்சு நாட்டில் நான்கு நாள் இலக்கிய மழை பொழிய கம்பவாரிதியை அழைத்தபோது தொலைபேசிமூலம் வாழ்த்தி வழியனுப்பிய யாழ் இந்துக்கல்லூரி பெற்றெடுத்து உருவாக்கி வளர்த்த பேராசான் சிவராமலிங்கம் இன்று எம்மிடையே இல்லை. கம்பவாரிதி 25-ஆம் தேதி வியாழக்கிழமை காலை இங்கு வந்திறங்கிய நற்செய்தியை கேட்டு மகிழமுடியாமல் **"இன்றிருப்பர் நாளை இல்லை"** என்ற வாக்கியத்திற்கு அமைவாக அன்னார் எம்மவர் அனைவரையும் மீளாத்துயரத்தில் ஆழ்த்தி இறைவனடி சேர்ந்துவிட்டார். வாழ்க்கை முழுவதும் பெரும் சவால்களைச் சந்தித்தபோதும் இன்முகத்துடனும் புன்முறுவலுடனும் யாருக்கும் உதவியும் நன்மையும் செய்ய அன்னார் என்றும் தவறியதில்லை.

1942-இல் பண்ணைக் கடல் விபத்தில் பலர் உயிரிழந்த போது இறப்பிலிருந்து காப்பாற்றப்பட்ட அன்று யாழ் இந்து விடுதி மாணவனாக இருந்த ஆசிரியப்பெருந்தகை தான் சாகா வரம் பெற்ற பெருந்தகையென பெருமையாக என்றும் பெருமை பேசும் பெரியாரை இன்று விதிவிட்டுவைக்கவில்லை. 1950-இல் சென்னைக் கிறித்துவக்கல்லூரியில் இருந்து பட்டம் பெற்று புது மெருகுடன் துடிப்புள்ள இளைஞனாக யாழ் இந்து ஆசிரியராக சேர்ந்து புகழ்பெற்ற ஆசானாகவும் இளைஞர்க்கு சிறந்த முன்மாதிரியாகவும் வழிகாட்டியாகவும் விளங்கினார். ஆனால் அதே வருடம் திருமணம் ஆகி சில மாதங்களில் பாரிச வாத நோய்த் தாக்கத்தால் வாழ்நாள் முழுவதும் பாதிப்புக்குள்ளானது மிகவும் துரதிஷ்டமே. எனினும் அன்னார் நோயின் தாக்கத்தையும் மீறி ஆசிரியப்பணி, பேச்சுப்பணி, இலக்கியப் பணி பொதுப்பணி என பலதுறைகளிலும் சிறந்து விளங்கி எமது சிறப்புமிகு கல்லூரியின் துணை அதிபராக ஓய்வு பெற்றார்.

வாழ்க்கைக்கு சிகரம் வைத்தாற் போல் 2004-இல் லண்டன் யாழ் இந்து பழைய மாணவர் கலையரசி விழாவிற்கு சிறப்பு விருந்தினராகச்சென்று சாதனைபுரிந்தார். வாழ்க்கையின் இறுதிப்பெருவிழாவாக இலங்கை கம்பன் கழகத்தின் வெள்ளி விழா விவாத அரங்கிற்கு மே-2005-இல் தலைமை தாங்கிய போது மிடுக்கான இளைஞனாக காட்சியளித்தது எம்மனக்கண் முன் என்றும் நிலைத்திருக்கும் காட்சியாகும். பெருமகனாக பெருவாழ்வு வாழ்ந்து மறைந்தும் மறையாத பேராசான் புகழ் என்றும் நிலைத்து நிற்பதாக!

**வி.சிவசுப்பிரமணியம்,**
**யா.இ.க முன்னாள்**
**மாணவன்-ஆசிரியர்.**

# சிவராமலிங்கம் அவர்களுக்கு என் கண்ணீர் அஞ்சலிகள்

- Capt. S. Santhiapillai -
Canada

எனது மதிப்புக்கும் அன்புக்கும் வணக்கத்துக்கும் உரிய அண்ணர் சிவராமலிங்கம் அவர்களுக்கு கண்ணீர் அஞ்சலி மடல் இவ்வளவு சீக்கிரத்தில் எழுதுவேன் என்று நான் இமையளவும் சிந்தித்ததே கிடையாது. அவரின் பிரிவைக் கேட்டதும் நான் திகைத்துப்போய்விட்டேன். இலண்டனில் இருந்து மரியதாசின் முதல் செய்தியைத் தொடர்ந்து அடுத்தடுத்து எல்லா நாடுகளிலும் இருந்தும் எம் அன்பு மாணவர்கள் பலர் அன்னாரின் மறைவுச் செய்தியை தெரிவித்தவண்ணம் இருந்தனர். இந்த மாணவமணிகள் ஏன் எனக்கு இச்செய்தியை தெரிவித்தார்கள், எனக்கும் சிவராமலிங்கம்பிள்ளை அவர்களுக்கும் எந்த விதத்திலும் உறவோ, உரித்தோ கிடையாது. இருந்தும் இம் மாணவர்கள் எங்கள் இருவருக்கும் இடையில் இருந்த நெருக்கமான உடன்பிறவா அண்ணன், தம்பி உறவை எங்ஙனம் புரிந்து கொண்டார்கள் என்று நினைக்கவே ஆச்சரியமாயிருக்கிறது. "Student are the best judges of the teachers" என்ற புலனாகிறது அவர்களின் கணக்கு தவறவில்லை. சரியானதே யாழ். இந்துக் கல்லூரிக்கு காலடி எடுத்து வைத்த அன்றே என்னை அன்புடன் வரவேற்று உற்சாகப்படுத்தி தங்களுடன் என்னையும் ஒரு ஆசிரியனாக ஏற்றுக்கொண்டு உறவாடியவர்கள் பலர். முதல்நாள் தொடக்கம் தம்பி சந்தி, தம்பி சந்தி என்று யாழ் இந்துக்கல்லூரியை விட்டுப்பிரியும்வரை என அன்புடன் அழைத்தவர் அண்ணன் சிவராமலிங்கம். அவர் மறைவதற்கு 10 நாட்களுக்கு முன்தான் 'தம்பி சந்தியை கதைக்கச் சொல்லு' என்று மரியதாஸ் மூலமாகவும், அவரை சைக்கிளில் காவித்திரிந்த அயல்வீட்டுப்பிள்ளையும் கனடாவில் பிரபல Banquet Hall உரிமையாளரான சசி ஊடாகவும் செய்தி அனுப்பி இருந்தார் சசி சொன்ன உடனேயே அண்ணர் சிவராமலிங்ககம் கனடாவுக்கு

கூப்பிட ஆசையாக இருக்கிறது என்று சசியிடம் கூறமுன்பே அவர் ஏன் சேர் சிவராமலிங்கம் மாஸ்ரரை இங்கு கூப்பிட்டால் என்ன? அதற்கான ஸ்பொன்சர், விமானப்பயணம் அத்துடன் எல்லாச் செலவையும் நானே ஏற்றுக்கொள்கிறேன், அதற்கான ஆயத்தங்களைச் செய்யுங்கள் என்றார். அவரைப் போல் அவரின் மாணவர்கள் பலர் ஊக்கம் கொடுத்தார்கள். கடைசியாக நான் சசிக்கு கூறியது நான் வரும் தை மாதம் மட்டில் யாழ்ப்பாணம் போக இருக்கிறேன். அவருடன் கதைத்து நிலைமையை பார்த்து செய்வோம் எனக் கூறிமுடித்தவுடன் தொலைபேசியில் அழைத்தேன். 'ஹலோ' என்று பதமையான அன்புக் குரல் வந்தது. எப்படி சேர் இருக்கிறீர்கள் என்று கேட்டேன். யார் தம்பி சந்தியா என்று மறுபுறத்தில் அந்த ஆவல் குரல் ஒலித்தது. நான் சந்திதான் கதைக்கிறேன் என்றேன். எப்படி அப்பு சுகமா இருக்கிறியா என்று ஆரம்பித்து சுமார் 20 நிமிடம் உரையாடினோம். அவ்வுரையாடலில் உங்களுக்கு கனடாவுக்கு கூப்பிடும்படி சசி தொடக்கம் எல்லா யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களும் விரும்புகிறார்கள் என்றேன். அப்பு என்னால் பயணம் செய்வது கஷ்ரம் அந்த Accidentக்கு பிறகு கால் கை கொஞ்சம் சரியில்லை என்று கூறினார். அடுத்து யாழ். இந்துக் கல்லூரியைப் பற்றியும், வரப்போகும் அதிபர் தெரிவு பற்றியும் யாழ்.இந்து பழைய மாணவர் சங்கம் பற்றியும் பல விதமான கதைகளையும் கதைத்தோம். அவற்றில் ஒன்றை கவலையுடன் தெரிவித்தார். கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் மத்தியில் நிலவும் ஒற்றுமையின்மை பற்றியும், அன்று யாழ் இந்துக் கல்லூரி அதிபர், ஆசரியர்கள் ஒற்றுமை பற்றியும் கதைத்தார். இன்றுள்ள நிலைமையை எண்ணி கவலைப்பட்டார். அடுத்து நான் தைமாதம் மட்டில் வருகிறேன் என்ன வாங்கிவர என்று கேட்டேன். எனக்கு ஒன்றும் வேண்டாம், நீ வந்து போனால் போதும் என்றார். இல்லை சேர் நான் ஒரு திறமான சாமான் வாங்கிவருகிறேன் என்றேன். சரி, சரி உன்ரை விருப்பம் போல செய் என்று கூறிக்கொண்டு எங்கள் உரையாடலை முடித்துக் கொண்டோம். பத்து நாட்கள் கழித்து வந்ததே செய்தி என்னை கதி கலங்க வைத்துவிட்டது. கண்ணீர் அஞ்சலி மடலும் எழுத தொடங்கிவிட்டேன்.

அண்ணர் சிவராமலிங்கம் அவர்களைப்பற்றி யான் பக்கம் பக்கமாய் எழுதுவேன். சுமார் பதினேழு ஆண்டுகள் யாழ். இந்துக் கல்லூரியில் சேவையாற்றிய காலத்தில் நூற்றுக்கணக்கான ஆசிரியர்களை சந்தித்துள்ளேன். எல்லோரும் சிறந்தவர்கள் அவர்களுள் சில மணிகள் இருந்தன அவைகளுள் அண்ணர் சிவராமர் தரமானவர் அதிபர்களோடு, ஆசிரியர்களோடு, மாணவர்களோடு, ஊரோடு, உற்றாரோடு அன்பாகவும், பண்பாகவும் பழகியவர். எல்லோரிடத்திலும் சகோதரத்துவம், சமத்துவம், சமாதானம் போன்ற அரும்பெரும் தத்துவங்களை வளர்த்தவர். அவர் ஒரு நல்ல இந்துமதத்தவர். ஆனால் சில கொள்கைகளை ஏற்க மறுத்தவர். பல இடங்களில் வாதிட்டதையும் நானறிவேன். ஏழைகளிடமும், உதவியற்றவர்களிடமும் இரக்கமும் பரிவும் கொண்டவர். கொலை செய்தவனையும் மன்னித்து, நற்புத்திகூறி, நல்லவனாக்கும் வசீகரம் கொண்டவர். எத்தனையோ கற்றோரும், மற்றோரும், உற்றாரும், உறவினர்களும் அவருடன் இருந்தும் மிகவும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்து இறையடி சேர்ந்தவர். திரு. P.S. குமாரசுவாமி அவர்கள் அதிபராயிருந்து இளைப்பாறிச் செல்லும்போது யா.இ.க. ஆசிரியர் கழகம் ஒருபிரியாவிடை மடல் பிரசுரித்தது. அதில் எனது கட்டுரையில் P.S. இன் இளைப்பாறலுடன் யா.இ. கல்லூரியின் நல்ல அதிபர்களின் அத்தியாயம் முடிவடைகிறது என்று எழுதியதை ஞாபகப்படுத்துவதோடு, யா.இ. கல்லூரியின் பழைய செழும்புபிடித்த மரங்களில் கடைசி மரமும் சாய்ந்து விட்டது. என்பதை பதிவில் இடுவதோடு இனிமேல் புலம் பெயர்ந்த எம் அன்பு மாணவர்களே, ஆசிரியர்களே நாங்கள் இனிமேல் யாரிடம் செல்வோம். இவன் எங்கள் யா.இ. கல்லூரியின் மைந்தன், ஒரு நல் ஆசிரியர் என்று நற்சான்று வழங்குவதற்கு யார் இருக்கின்றார்கள், அதற்கு அருகதை உள்ளவர்கள் எவரும் உண்டா? எங்களை யா.இ. கல்லூரியின் பெயலாரால் வா மகனே என்று அழைப்பதற்கு ஒருவரும் இல்லையே. என்று ஏக்கத்துடன் ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கும் உங்கள் சார்பாக அன்புச் சிவராமருக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தி இத்துடன் முடிக்கிறேன்.

# இந்துவின் அறிவுசிகரம் சரிந்தது

**கம்பவாரிதி இ. ஜெயராஜ்**

உலகுக்காக வாழ்ந்த ஓர் உத்தமர் அமரரானார்

சிவராமலிங்கம் மாஸ்டர்

பல தசாப்தங்களாக யாழ் இந்துக்கல்லூரி மாணவர்களால்

மந்திரம்போல் உச்சரிக்கப்பட்ட பெயர் இது.

எப்போதும் சிரித்தமுகம்.

நீறு துலங்கும் நெற்றி.

மலையான சுமைகளையும் நொடிப்பொழுதில் நீக்கும் மந்திரச்சிரிப்பு

இவை அவரின் அடையாளங்கள்.

தமிழும், ஆங்கிலமும் அவர் வயில் சரளமாய்ப் புரளும்.

சைவமும் சித்தாந்தமும் அவர் குடும்பச்சொத்து.

புங்குடுதீவு தந்த பொன்மகன்.

இந்துக்கல்லூரி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,

சென்னை கிறிஸ்தவக் கல்லூரி ஆகியவை

இவரை புடம்போட்ட கல்விக்கழகங்கள்.

தொ.பொ.மி போன்ற பேரறிஞர்களும் கற்ற நிமிர்வு.

இவையனைத்தும் சேர்ந்து அவரை ஒரு மாமலைய-ாய் நிமிர்த்தியது

அந்த அறிவு மலை இந்துக்கல்லூரியில் வைக்கப்பட்டது எங்கள் பாக்கியம்

அசையாத நெஞ்சுரத்திற்கு அவர் ஓர் அடையாளம்.

திருமணமாகி ஓரிரு மாதங்களிலேயே பாரிசவாதம் கால்களைப் பறிக்க

கலங்கி வைத்தியம் செய்த டாக்டருக்கு ஆறுதல் சொல்லி நிமிர்ந்தவர்.

தடி ஊன்றி அவர் நிமிர்ந்தபொழுது ஊரே ஆச்சரியப்பட்டது.

மாணவர்களின் கை பற்றிநடப்பார்.

மாணவர்களில் தாங்கி நடப்பதாய் பலரும் நினைப்பார்கள்

ஆனால் மாணவர்களைத் தாங்கி நடக்கும் நடை அது.

அவருக்குக் கைகொடுத்த எவரும் தாழ்ந்ததில்லை.

அதற்காகவே அவருக்கு கைகொடுக்க மாணவர்களிடையே போட்டி நடக்கும்

இந்துக்கல்லூரியில் தத்தமக்கு கற்பித்த ஆசிரியர்களை மாணவர்கள் அறிவார்கள்.

ஆனால்! ஆச்சரியம்.

சிவராமலிங்கம் மாஸ்டரை எப்படியோ எல்லோருக்கும் தெரிந்திருந்தது.

அது அவரது மந்திரஈர்ப்பு.

கல்லூரியில் உபஅதிபராய் இருந்து ஓய்வுபெற்ற பிறகும்

நியமிக்கப்படாத இந்துக்கல்லூரிப் பிரதிநிதியாய் இயங்கிகொண்டிருந்தவர்.

தன் கடைசி மூச்சுவரை இந்துகல்லூரி உயர்வுக்குப் பாடுபட்ட மாமனிதர்.

பிற்காலங்களில் முச்சக்கரவண்டி அவரது வாகனமாகிவிட்டது.

ஊருக்காக ஆசிரியரை ஏற்றி ஓயாமல் ஓடித்திரிந்த அந்த வண்டி அதிர்ஷ்டம் செய்தது

எவருக்கும் பாரமாய் இல்லாத தன்வாழ்வு போலவே மரனத்தையும் அனைத்துக்கொண்டார்.

இன்று உலகேங்கும் அவர் விதைத்த விதைகள் விருட்சமாய் நிற்கின்றன.

ஆனால் வீட்டிலோ பிஞ்சுத்தளிர்களாய் இரண்டு பேரப்பிள்ளைகள் வாடி வதங்கி நிற்கின்றன.

அப்பயிர்களை செழிக்கச் செய்வது நம்கடன்.

ஊருக்காகத் தோள்கொடுத்த மாமனிதரின் உறவுக்காகத் தோள்கொடுப்போம் அதுவே நாம் அவருக்கு ஆற்றும் கடன்

இன்பமே எந்நாளும் துன்பமில்லை

# மாமனிதன்
# க. சிவராமலிங்கம் (B.A.) சென்னை

**அ. கருணாகர்** B.Dc., Dip-in-Ed
(ஓய்வுபெற்ற சிரேஸ்ட பிரதி அதிபர்)

திருவாளர் க. சிவராமலிங்கம் அமரத்துவம் அடைந்த செய்தியைத் தீபம் தொலைக்காட்சி வழங்குங் காலைச்செய்தித் தகவலூடாக அறிந்துள்ளேன். அதனைக் கேட்டதும் இன்னொரு யாழ். இந்துப்பழைய மாணவருக்கூடாக உறுதி செய்துள்ளேன். அவர் மரணிக்கும் பொழுது அவருக்கு ஏறத்தாழ எழுபத்தொன்பது (79) வயதாகும். இன்னொரு இரு கிழமைகளில் அவர் எண்பது (80) வயதைப் பூர்த்தி செய்திருப்பார். அவர் ஆயுள்வேத வைத்தியர் கணபதிப்பிள்ளையின் புதல்வராவார். அவரின் சொந்தவூரான புங்குடுதீவில் பிரசித்தியும் புகழும் உடைய ஒரு குடும்பத்தில் பிறந்தவராதலினால் மிகச்செல்வாக்குப் பெற்றவராகவும் பலராலும் போற்றப்பட்டவராகவும் இருந்தார்.

இவர் ஆரம்பக் கல்வியைத் தனது சொந்தவூரான புங்குடுதீவில் முடித்தபின்பு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் தனது இரண்டாம் நிலைக்கல்வியைத் தொடர்ந்தார். அங்கு கற்கும் பொழுது ஒரு கீர்த்திபெற்ற மாணவனாகப் பல துறைகளிலும் ஈடுபாடுடையவராகவும், மாணவர் சங்கத்தின் தலைவராகவும் திகழந்தார். இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் விடுதி மாணவராகவும், காலப்போக்கில் விடுதி மாணவத் தலைவராகவும், மாணவர்களின் கட்டுப்பாட்டில் அக்கறையுள்ளவராகவும், அவர்களுடைய குறைபாடுகளுக்குச் செவிமடுத்து ஆவன செய்தமையாலும் விடுதி மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். இவர் இரண்டாம் நிலைக்கல்வியை முடித்தபின்பு தனது மூன்றாம் நிலைக்கல்வியை தொடர்வதற்கு சென்னையிலுள்ள பச்சையப்பன் கல்லூரியில் B.A. பட்டதாரியாவதற்கு காலெடுத்து வைத்து தமிழையும், ஆங்கிலத்தையும் பாடங்களாகக்

கொண்டு படித்து B.A. பரீட்சையில் மிகச்சிறப்பாகச் சித்தியடைந்தார்.

அதன் பின்பு யாழ்ப்பாணம் வந்த அவர் படித்த யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலேயே ஆசிரியராக நியமிக்கப்பட்டார். அங்கு தமிழும், சமயமும், இலக்கியமும் கற்பிக்கும் புகழ்பூத்த ஆசானாக இருந்து பல வருடங்களாக க.பொ.த. சாதாரணப் பரீட்சையில் நூற்றுக்கு நூறு வீதமான மாணவர்களை விசேட சித்தி பெறவழிவகுத்தார். இதனால் அவர் மதிப்பு மேலும் ஓங்கியது. ஆசிரியத் தொழிலின் இறுதிக் கட்டத்தில் அவரின் சுயமுயற்சியினால் பிரதி அதிபராக உயர்சி பெற்று கல்லூரியின் பெருமையை மேலும் பிரசித்திபெறச் செய்தார். இவருக்கு யாழ். இந்து ஒரு இரண்டாம் வீடாக அமைந்தது என்று சொன்னால் மிகையாகாது.

மேலும் பள்ளிக்கூடத்துக்குப் புறம்பான செயல்களிலும் ஈடுபட்டிருந்தார். குறிப்பாக அகில இலங்கைக் கம்பன் கழகத்தை ஸ்தாபித்தவர்களில் இவரும் ஒருவராகவும், மற்றும் சேக்கிழார் மன்றம், அகில இலங்கை இந்த மாமன்றம் போன்ற நிறுவனங்களிலும் அங்கம் வகித்தும் வந்தார். இவரின் தமிழ்ப்பேச்சு வன்மையால் இவரைப் பேச்சுக்கு அழைக்காத மன்றங்களே கிடையாது. நவராத்திரி தினங்களில் ஒன்பது நாட்களும் ஏதாவது ஒரு சங்கங்கள் பேச்சுக்கு அழைத்தபடி இருக்கும். சமயச் சொற்பொழிவுகளில் ஆற்றலும், ஊக்கமும் உடையவர். சமயத்துக்கும், தமிழுக்கும் இலங்கையில் முன்னின்று தொண்டு செய்தவர்களில் இவரும் ஒருவராவார். எனவே இவருடைய இழப்பினால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்ப இவருடைய தகைமை உடையவர் எப்போ வருவார் என்பது ஒரு கேள்விக்குறி! இவ்வாறு தமிழ்ச்சமூகத்துக்குத் தனது ஓய்வு நேரத்தை அற்பணம் செய்தமையால் இவரை மாமனிதன் என கௌரவிப்பது காலத்துக்கேற்ற செயலாகும். இறுதியாக இவரது குடும்பத்தாருக்கும், உற்றார், உறவினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

# ஆசிரியருக்கு அமரத்துவ அஞ்சலி !

**- க. இரகுபரன் -**

மொழித்துறை, தென்கிழக்கு பல்கலைக்கழகம்,
இலங்கை.

புயல், பூகம்பம், வெள்ளம் முதலாக இயற்கையாகவும் போர், கலவரம் முதலாக செயற்கையாகவும் நிகழும் எத்தனை எத்தனையோ அநர்த்தங்களுக்கு மத்தியிலும் அழிந்துவிடாது இந்த உலகம் நிலை பெற்று நிற்கிறதே என்று அதிசயித்து அது குறித்து ஆராய்ந்த சான்றோர்கள் தமக்கென முயலாநோன்தான் பிறர்க்கென முயலுநர் சிலர் உள்ளமையே பூமியின் நிலைபேற்றுக்குக் காரணம் என அமைதி கண்டார்கள். அந்த உண்மையை நாமும் ஏற்றுக்கொண்டால் எங்கள் ஆசிரியர் பிரான் க. சிவராமலிங்கப்பிள்ளையும் இந்த உலகின் நிலைபேற்றுக்குக் காரணமாய் விளங்கியவர் என உறுதியாய்க் கூறத் தர்க்கம் தாராளமாய் இடங் கொடுக்கும். ஏனெனில் அவர்தம் முயற்சியெல்லாம் தமக்காயல்லாமல் பிறர்க்காயே அமையும் தன்மையால் எனலாம்.

அறிவு, அருள் இரண்டுமே ஆசிரியன் ஒருவனுக்குரிய அடிப்படைத் தகுதி என்பார்கள். இரண்டிலும் குறைபாடுடையவர்களே இன்று அநேகர். அகத்தே அருளுணர்வில்லாமல் அறிவை மாத்திரம் தம் அடிப்படைத் தகுதியாய்க் கொண்டவர்களும் இருக்கிறார்கள் - என்பு தோல் போர்த்த உடம்பினராய். இரண்டும் ஒருசேர வாய்த்தவர்கள் மிகச் சிலரே. அவர்களுள் ஒருவராய் விளங்கியவர் இவர்.

அருளுடைமையால் அவர் தம் மாணவர்க்கு ஆசிரியராய் மாத்திரம் அல்ல, நண்பனாய், மந்திரியாய், தெய்வமாய் எல்லாம் ஆகி அதற்கப்பால் சேவகனுமாய் ஆகி நின்றவர்.

ஆரம்பத்தில் யாழ் இந்துக்கல்லூரியிலும் பின் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் அவர் பெற்றுக் கொண்ட அறிவும் ஆளுமையும் உலகு இன்புறும்படியாகக் பயன் செய்தன. தொ. பொ. மீ. முதலான பேரறிவாளரிடத்துக் கற்ற கல்வியும், கூடித் திரிந்த பயிற்சியும் அவரை உடல் கொண்டு உலவுவதோர் ஊருணியாக்கின. யாழ்ப்பாணத்தில் அவர் சார்ந்த சூழலிலும், சுற்றங்களிலும், மாணவர் சமூகத்திலும், அறிவுலகிலும் அவரில்லாத மங்கல கருமங்கள் இல்லை. எல்லோர்க்கும் அவர் இன்றியமையாதவர். எந்நேரமும் மலர்ந்த அவர் வதனம் சபைக்குச் சோபனம் கொடுப்பது.

தன்னை எதிர்த்தவரையும், தாக்கினவரையும் கூடத் தாங்கும் தன்மையால் அவர் பூமியை ஒத்தார். தொலைவிலும் தெரியும் தோற்றத்தால், மாண்பால் அவர் மலை. சமன் செய்து சீர்தூக்கும் தன்மையால் துலாக் கோல். இவை அவர் தம் ஆசிரியத்துவத்தின் நலம் உணர்த்தும் தன்மைகளாய்த் திகழ்ந்தன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் சரி, யாழ்ப்பாண சமூகத்திலும் சரி, அன்றித் தனிப்பட்டவர் மத்தியில் ஆயினும் ஏதேனும் சிக்கல்கள் என்றால் அதைத் தீர்த்துவைக்கத் தக்க ஆளுமை அவர்க்கல்லாமல் வேறு யாருக்கும் வாய்த்ததில்லை. யாழ்ப்பாண சமூகத்துக்கு அவரே அப்புக்காத்துவும், நீதவானும், அமைச்சரும். அவர்க்கு மேலே உத்தியோகம் பார்த்த அதிகாரிகள் வரையிலும் அவரிடம் ஆலோசனை கேட்காதவர்கள் இல்லை. யாழ்ப்பாணத்துக் கழகங்களின் புரவலராயும் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகக் கலைப்பீட அவையின் அங்கத்தினராயும் அமைந்தமை எல்லாம் இத் தன்மையின் உத்தியோக பூர்வமான வெளிப்பாடேயாம்.

தாம்பத்திய வாழ்க்கையில் அடியெடுத்து வைத்த காலம் முதலே, அடியெடுத்து வைக்க முடியாத படி ஆகிவிட்ட உடல் நிலை அவருடையது. வயது எண்பதைக் கடந்த நிலையிலும் அவர் உற்சாகம் குன்றியதில்லை. முச்சக்கர வண்டிதான் அவர்க்கு ஆசனமும் வாகனமும் அலுவலகமும் அதில்தான் ஆகாரமும் அதில்தான்.அதில் அமர்ந்தபடியே அவர் நடத்தும் அருளாட்சியால் அது அரியாசனமும் ஆகியது. தம்மை மற்றவர்கள் தாங்கவேண்டிய

வயதிலும், தளராமல் தன் கருமம் அனைத்தும் தானே பார்த்து, தன்னைத் தாங்கவேண்டியவர் தம் கருமங்களையும் பார்க்கும் தாளாண்மையாளராய்த் தயாளகுணசீலராய்த் திகழ்ந்தார்.

தலைமுறை இடைவெளி என்பதற்கு அர்த்தம் காணாதவர். தள்ளாத வயதுக் கிழவர் முதல், தத்தித்தவழும் மழலை வரையில் சலிக்காமல் பழகவல்லவர். அவர் சிரிப்பது, கதைப்பது எல்லாமே அழகு் கோபித்தால் அது கூட அழகுதான். கோபம் வந்தால் வார்த்தைகள் ஆங்கிலத்தில் வரும். அதுவும் அவர் தமிழ் போலவே அழகு சொரியும். மேலும் கோபிக்கமாட்டாரோ என ஏங்கவைக்கும் கோபம் அவருடைய கோபம்.

அவருடைய சிந்தனையில் அவரில்லை. அவரைச் சார்ந்த பிறரெல்லாம் இருந்தார்கள். மற்றவர் வளர்ச்சியே தன் வளர்ச்சி என்றும், மற்றவர் மகிழ்ச்சியே தன் மகிழ்ச்சி என்றும் வாழ்ந்தவர் அவர். இறப்பதற்கு இரண்டொரு நாள் முன்புதான் தன் கண்ணையும் மருத்துவக் கல்லூரிக்குத் தன் உடலையும் கூடச் சாஸனம் பண்ணிவைத்தார் என்னும் செய்தியால் தன் மரணம் பற்றிய உள்ளுணர்வும் உலகம் பற்றிய நல்லுணர்வும் அவரிடம் இருந்தமை உறுதியாகின்றது.

'அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு'

என்ற வள்ளுவர் வாக்குக்கு இலக்கணமாய் அமைந்த ஒரு மகாத்மாவிடம் நாமும் படித்தோம் என்ற பெருமை எமக்குரியது. ஈசன் அடிக்கீழ் இருந்தபடியும் எம்மனோர் நலம் குறித்தே சிந்திக்க வல்லவர் அவர். யாழ் இந்து உட்பட அனைத்து சமூகமும் ஒப்புயர்வற்ற ஓர் ஒப்புரவாளனை இழந்து விட்டமை கவலைக்குரியது. அவரையொத்த பிறவியொன்றை ஈசன் எம் சமூகத்துக்காய் அருள்புரிவானாக.

## நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்

**- இணுவையூர் பதஞ்சலி நவேந்திரன் -**

பிறப்பென்று ஒன்று இருந்தால் இறப்பு ஒன்று இருந்தேயாகும். இயற்கையின் நியதி இது. விதி விலக்கு யாரும் இலர். உயிர்களின் ஜனனமும் மரணமும் வாழ்க்கைச்சக்கரம். இருப்பினும் சிலருடைய வாழ்வு, இறப்பு, வரலாறாகிவிடுகிறது. காரணம் இவர்கள் தமக்காவும் தமது குடும்பத்தினருக்கும் மட்டுமன்றி தம்மைச் சார்ந்தோருக்காகவும் சமூகத் திற்காகவும் வாழந்தமையே.

ஒரு வகையில் பார்த்தால் துறவறம் எவ்வளவு இலகுவானது. ஒப்பீட்டு ரீதியில் இல்லறம் கடுமையானது. இல்லறத்தினூடும் மகான்களாக வாழ்வது ஒரு தவம். ஒரு மகானின் தனித்துவங்கள் - அன்பு, காருண்யம், இன்முகம், மற்றவர்களிற்காகத் தன்னை ஈய்தல், இல்லை என்று சொல்லாமை, தன் தடயமாக ஒரு சமூகத்தை உருவாக்குதல், உண்மைக்குப் புறம்பானதை சமுகமே எதிர்த்து நின்றாலும் விளம்புதல். இதில் எது சிவராமா் என்று எல்லோராலும் அன்பொழுக அழைக்கும் சிவராமலிங்கம்பிள்ளைக்குப் பொருந்தாதது. இவை எல்லாவற்றின் கூட்டுக் குளிசை அல்லவா இந்த மாமனிதர். இவர் ஒரு சாதாரண மனிதரே அல்லர். அவதார மகா புருஷர். இவா் வாழும் காலத்தில் வாழ்ந்தவர்கள், படித்தவா்கள், பழகியவா்கள், எல்லோருமே ஆசிர்வதிக்கப்பட்டவர்கள்.

**'கற்றதனா லாய பயனென் கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழா அர் எனின்'**

என்பது வள்ளுவன் வாக்கு. கடவுள் வாழ்த்து. இதற்கு ஒருபடி மேலே போய்

**'கற்றதனா லாய பயனென் கொல் - இக்கல்வியினால் மற்றவர்க்கு பயனிலை யெனின்'**

என்று தான் கற்ற கல்வியை மற்றவர்கட்கு விதைத்துச் சென்றவர் சிவராமலிங்கம் ஸை. இவருடைய கற்பித்தலே ஒரு தனித்துவமானது. முறைசார் கல்வியுடன் முறைசாராக்கல்வியையும் கலந்துஇ குழைத்து ஊட்டுபவர். இதனால் வறண்ட இலக்கணங்களையும் வனப்புறச் செய்யும் அலாதி ஆற்றலுடையவர். இன்று இருக்கும் இலங்கையின் தலைசிறந்த பேச்சாளர்கள் கல்விமான்கள், எழுத்தாளர்கள் அனைவரும் (விதிவிலக்குண்டு) இவரின் கைதடவி வளர்ந்தவர்கள் அன்றோ!.

'கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தேநிற்கும் அவையல்ல நல்ல மரங்கள்' இது ஔவையாரின் மூதுரையின் ஒரு பாட்டின் முதற்பகுதி. இதனுடைய பிற்பகுதியைச் சேர்த்தால் வேறு கருத்துப்பிறக்கும். இந்த முதல் இரண்டு வரிகளையும் தனித்துப்படிந்தால் அதற்குரிய அத்தனை அம்சங்களுடன் வாழ்ந்தவர் இவர். தன்னிச்சையாக 'வச வச' என்று காட்டிலே நின்று என்ன பயன்? சமூகத்திற்கு பயன்தரு மரமாக வாழ்ந்து காட்டியவர் சிவராமலிங்கம் ஸை.

இவருரைய கல்வியறிவிற்கு எல்லையேயில்லை. தமிழ்இ ஆங்கிலம்இ இலக்கியம், இலக்கணம், வாழ்வியல், அனைத்திலும் கரைகண்டவர். இருப்பினும் தன்னடக்கத்திலும்இ மற்றவர்களினுடைய கல்வியறிவை மதிப்பதிலும் சிறந்தவர். அண்மையில் (சொக்கன்) சொக்கலிங்கம் ஆசிரியருடைய கதைவந்த போது 'அவன் ஒரு கடல் அவனுக்குத் தெரிந்த பத்தில் ஒன்று கூட எனக்குத் தெரியாது' என்றார். என்னே தன்னடக்கம். 'அவன்' என்று தனது நண்பனை விளித்த அன்பின் பிரதிபலிப்பு. ஒரு சமுத்திரத்தைப்பார்த்து இன்னுமொரு சமுத்திரம் வர்ணிக்கிறது. 'கற்றாரை கற்றோர் காமுறுதல்' என்பது இது தானோ?

தனது மாணாக்கரில் அலாதிப்பிரியமுடையவர். தனது மாணவர்களை தன்னிலும் ஒருபடி மேலே தூக்கி

ஊக்குவிப்பதில் இவர் ஒரு தனிவித்தகர். கம்பன் கழகத்தின் தொடக்க நாயகன். கழகத்தினூடு வளர்த்த காளையரை ஊக்கப்படுத்துமுகமாக பட்டிமன்றங்களிலும், வழக்காடுமன்றங்களிலும் தானும் அவர்களில் ஒருவராகி எதிரும் புதிருமாக வாதிட்டு தனது மாணாக்கன் கம்பவாருதி ஜெயராஜாவை தலைமை கொள்ளவைத்து அழகு பார்த்த உன்னதசிற்பி.

கம்பவாருதி ஜெயராஜா என்றதும் ஒரு சம்பவத்தைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. 2003ம் ஆண்டு ஆயல மாதப்பகுதியில் நான் யாழ் சென்ற போது ஜெயராஜா சர்ச்சைக்குரிய 'வாராதோ வரவல்லாய்' என்னும் கட்டுரைக்கு கனடாவில் இருந்து ஒருவரும், வன்னியில் இருந்து இன்னுமொரு வாசகரும் ஜெயராஜாவுடன் கருத்துப்போர் தொடுக்காது, வாததர்மத்திற்கு ஒவ்வாத வகையில் தனிப்பட்டமுறையில் தாக்கி எழுதியிருந்தனர். ஆசிரியரைச் சந்தித்த சந்தர்ப்பத்தில், இப்படி நிங்கள் அறிவூட்டி வளர்த் தெடுத்த மாணவனை தாக்கியிருக்கிறார்களே. களத்தில் இறங்கி பதில் கொடுக்கும் படிவேண்டினேன். பதிலுக்கு ஒளிவீசும் காந்தப்புன்னகையுடன் கூறிய பதில் 'அவனுக்கு என்னை விட அறிவு கூட. அவனே இதற்கு தகுந்தநேரத்தில் பதில் கொடுப்பான்' என்று கூறி தலையிட மறுத்துவிட்டார். அதுபோலவே ஜெயராஜாவும் 'வாழ்க்கைக் கிரிக்கெட்' என்று ஒரு கட்டுரையை சிறிது காலத்தின் பின் தனது பதிலாக எழுதியிருந்தார்.

இதேபோல அண்மையிலும் ஒரு சம்பவம் நடந்தது. மீண்டும் ஜெயராஜா பேரில் அவதூறுகள் Londonல் இருந்து வெளிவரும் 'ஒரு பேப்பரில்' அருத்தடுத்து வெளிவந்தது. தொலைபேசி மூலம் தெரிவித்த போது, 'அட இவங்களை விடக்கூடாது பதில் எழுதுகிறேன். அவங்களுக்கு அனுப்பி விடு' என்று 'ஒன்றுக்கு ஒன்று' என்றொரு கட்டுரையை எழுதியனுப்பியிருந்தார். இதுவே இவரின் கடைசிக்கட்டுரை என நினைக்கிறேன். கடைசியாகவும் முடிவாகவும் இருக்கவேண்டும் என்பதற்குத்தானோ இந்த மனமாற்றம்?

எந்த ஒரு ஆசிரியனுக்கும் தன் மாணவரில் அன்பிருக்கும். விதிவிலக்காக யாரும் இருக்க முடியாது. சிவராமலிங்கம் எசை தனது மாணாக்கரில் அன்புமட்டுமல்ல, அவர்களைப் பாதுகாப்பதிலும் 'பாயும் புலி'. ஒரு சம்பவம் 1970 காலப்பிற்பகுதியில் நடந்தது. அப்போது ஆசிரியர் யாழ் இந்து விடுதிப் பொறுப்பாசிரியர். விடுதிமாணவர்கள் ராஜா படமாளிகையில் எதோ ஒரு குழப்பத்தில் அகப்பட்டு நிர்வாகத்தினரும் Policeஉம் இணைந்து மாணவர்களைப் பின்னிக்கொண்டிருந்தனர். செய்தியறிந்து ஆசிரியர் தனது ஊனத்தையும் கருதாது விடுதியில் இருந்து ஒரு மாணவனின் cycle bar இல் சம்பவ இடத்திற்கு வந்து, Inspector இராசையாவே மாணவர்கள் மீது கைவைத்தவர் என்பது தெரிந்தும்இ அவரைப்பார்த்து "who is the donkey ,who touched my child?" என்றாரே. யாருக்கு வரும் இத்துணைத்துணிவு?

மாணவர்களுக்கும் இவருக்கும் இருந்த தொடர்பை ஒட்டு மொத்தமாகக் கூறினால் 'கண்ணன் என் சேவகன்' என பாரதியார் உவமை கொண்டது போலாகும். நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியராய், பண்பிலே தெய்வமாய், பார்வையிலே சேவகனாய், எனப்பலவாகும். இல்லாவிடில் தனது நண்பன் P.Sகுமாரசாமி தனக்கு உபஅதிபராக வரும்படி கேட்டபோது, ஆசிரிய சேவையால், கல்வித்தகுதியால் சகல தகுதி இருந்தபோதும் மறுத்த ஆசிரியர், பின்னர் தனது மாணவன் ஞ பொன்னம்பலம் கேட்ட போது மறுக்கவில்லை. தனது மாணவர்களை தனக்கு மேல் வைத்துப்பார்ப்பதில் அலாதிப்பிரிய முடையவர்.

சேக்கிழாரையும், கம்பனையும் தனது இருகண்கள் எனக் கூறுவார். இதனால்தானோ சேக்கிழார் போற்றிய சிவனின் முதல் பாகத்தையும் கம்பன் போற்றிய ராமரின் பெயரையும் கொண்டு சிவராமர் என பெற்றோர் பெயர் வைத்தனர். எவ்வளவிற்கு சமயத்தில் ஈடுபாடுண்டோ அவ்வளவிற்கு இடது சாரிக் கொள்கையிலும் ஈடுபாடு இவரிற்கு உண்டென்று சொன்னால் பலர் நம்பமறுப்பர். சிறந்த முற்போக்கு வாதி. இறை வழிபாட்டையுமஇ தர்க்க ரீதியாகப் பார்ப் பவர். அண்மையில் கதைக்கும் போது கூறினார் 'ஆடிப்பூரம் அம்மனின் பிறந்த நாளென்று

கொண்டாடுகிறார்கள். ஜோனி வழிப்பிறக்காதவள் அம்மன். எப்படிப் பிறந்தநாள் வரும்? யாராவது எனக்குச் சமய ஏடுமூலம் ஆதாரத்துடன் காட்டமுடியுமா'? என்றார். இவரின் மறுபகுதி பகுத்தறிவு வாதி என்றால் மிகையாகாது.

யாழ் இந்துவில் இவருடையகாலம் ஒரு பொற்காலம். ஒரு சரித்திரம். இவர் பதித்தவிட்டுச் சென்ற தடயங்கள் பற்றி நிறையவே கட்டுரைகள் வந்திருக்கின்றன. இவற்றை மனத்தில் கொண்டே இவற்றைத்தவிர்த்து இவரின் மற்றைய குணாதிசயங்களை எழுத முற்பட்டேன். சுருங்கக் கூறின் யாழ் இந்துவின் சரித்திரத்தில் இவர் போல் ஒருவர் முன்பு இருந்ததும் இல்லை. இனி இருக்கப்போவதும் இல்லை. இவர் அத்தியாயம் ஒரு தனி அகராதி. இவர் விட்டுச் சென்றிருக்கும் vacuum யாராலுமே நிரப்ப முடியாது.

இவரை நினைக்கும் போதெல்லாம் என்மனத்தில் தோன்றுவது பழைய சினிமாப்பாடல் ஒன்று.

"தங்கத்திலே ஒரு குறைவிருந்தாலும் தரத்தினில் குறைவதுண்டோ-உங்கள் அங்கத்திலே ஒரு குறைவிருந்தாலும் அன்பினில் குறைவதுடோ"

அண்மைக்காலங்களில் என் அன்புக்குரிய பலரை வரிசைவரிசையாக இழந்திருக்கிறேன். முதலில் இசையில் ஈழத்தவன் எந்த விதத்துலும் குறைந்தவனில்லை என்று நிலைநாட்டிய இயலிசைவாருதி வீரமணி ஐயா அவர்கள். அடுத்து முத்தமிழ் வித்தகர் "சொக்கன்" என்று அழைக்கப்படும் சொக்கலிங்கம் ஆசிரியர். இவ்வாண்டு இவ்வுலகிற்கு என்னை ஈய்ந்த என் தயார். இறுதியில் என்னை ஆட்கொண்ட சிவராமலிங்கம் ஆசிரியர். அம்மாவின் பிரிவை ஆசிரியரிடம் பகிர்ந்த போது அவர் கூறிய கவிதை மனத்தை இப்பவும் நெருடுகிறது.

சின்ன ஓர் பொருள் தந்தாரை<br>
சீவன் உள்ளளவும் உன்னவேண்டும் என உரைப்பர் பெரியோர்<br>
தன்னை ஆருயிரை<br>
தரணியில் வாழ்வு தந்த<br>
அன்னை தந்தையர்க்கு செய்யும்<br>
அருங்கைமாறு உழதோ அம்மா

இவர் உடலாலும் மனதாலும் பட்டவேதனைகள் எழுத்திலடங்கா. ஆனாலும் சோர்ந்திலர். தனது பேரர்கள் மீது வைத்திருந்த பாசம் சொல்லிடங்கா. இவருடைய மனத்தில் கடைசியில் ஒரு வருத்தம் இருந்திருந்தால் அது தன்னையே நம்பியிருக்கும் தனது பேத்திகளைப் பற்றியதாகத்தான் இருந்திருக்கும். பேத்திகளுக்கு சொல்லக்கூடியது ஒன்று தான். யாழ் இந்து மாணவர்கள் உங்களிற்கு என்றும் துணையாக நிற்பார்கள்இ கலங்காதீர்.

இந்த மகாபுருஷனைப்பற்றி எழுதும் எந்த அருகதையும் எனக்கில்லை. படிப்பால் பண்டிதனில்லை. இவரிடம் படித்தவனும் அல்லன். மேடைப்பேச்சிற்குஇ எழுத்துத் துறைக்கு இவரிடம் பாடாந்தரம் கற்றவனுமில்லை. உறவு முறை சொல்ல உறவில்லை. நான் யாழ் இந்துவில் கற்ற காலத்தில் (1966-1975) எட்ட நின்றே இவர் பால் கவரப்பட்டேன். அன்பு கொண்டேன். 'நீளநினைந்தடியேன்' என்ற ஏக்கத் தொடர்பு மட்டுமே.

**ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை**
**இரு நிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே.**

இறுதியில் உங்கள் உற்ற நண்பரின் பாவால் சமர்ப்பணம்.

**கற்றுப் பெற்றவை பட்டுப் பெற்றவை**
**பற்பல கலந்து பெற்றவை**
**உற்றும் என்ன நற்பயனென் றெண்ணிடில்**
**ஒன்றும் இல்லை உண்மையில்**
**மற்றைப்பற்றியே பற்பல துன்பம்**
**பாரினிலே அடையாமலே.**
**நற்றவர் நல்லைநாதனே!**
**உனை நாடவே எமை வைப்பையே**

-சொக்கன்-

## இந்துக் கல்லூரியின் இமயம் சரிந்து விட்டது.

நன்றிக்கடன் மிக்க மாணவன்,

**- ஆறுதிருமுருகன் -**

உப அதிபர், இந்துவரோதயக்கல்லூரி, சுன்னாகம்.

இந்துக் கல்லூரியின் இமயம் சரிந்து விட்டது. பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு ஒளிகாட்டிய கலங்கரை விளக்கும் அணைந்து விட்டது. யாழ்பாணம் இந்துக் கல்லூரியில் என்னைப் போன்ற பலரை உருவாக்கிய ஒப்பற்ற சிற்பி சிவராமலிங்கம் ஐயாவை இழந்து தவிக்கிறோம். என்னைப் பொறுத்தவரை தாயாய் தந்தையாய் நண்பனாய் நல்லாசிரியனாய் விளங்கியவர் ஆசிரியர் சிவராமலிங்கம்பிள்ளை அவர்கள். யாழ் இந்துக்கல்லூரியின் சைவத் தலைவராக விளங்கிய இவர் கல்லூரி வாழ்வில் இந்து இளைஞர் மன்றத்தின் காப்பாளராக அரும்பணியாற்றினார் தினந்தோறும் பிராத்தனைக் கூட்டத்தை இராக நடத்துவதில் இவரதுபங்கு அளப்பரியது கல்லூரியில் நடைபெற்ற சமயவிழாக்கள் அதிகரித்தும் இவரது ஆளுமையில் வெளிப்பாடாகவே விழுங்கியதெனலாம். சேக்கிழார் விழாக்காள் ஏற்பாடு செய்வதில் முன்னோடியாகத் திகழ்பவர். இவர் பட்டினத்து சிவன்கோவிலிலிருந்து பெரியபுராண ஏடுகளை ஊர்வலமாகக் கொண்டு புறப்படுவதிலிருந்து விழாவிற்கு விருந்துபசாரம் வரை ஆசானின் கை வண்ணத்திலேயே ஒப்பேறுவது

வழக்கம். கால் நடக்க முடியாத இந்த மனிதன் எம்மை யேற்றவர் இன்று நிமிர்ந்து நிற்பதற்கு களம் அமைத்துக் கொடுத்த மகான். சேக்கிழரின் மகா நாடுகளில் இந்தியப் பேச்சாளருக்கு நிகராக கணீர் என்ற குரலில் மடைதிறந்தவெள்ளம் போல் ஆசான் பேசிய நாட்கள் பசுமையாக இன்னும் நினைவில் உள்ளது. சைவப் பரிபாலன சபை நடத்திய சைவ மாநாடுகளில்ஆழ்ந்த அறிவோடு ஆங்கிலத்திலும் தமிழிலும் சைவத்தின் மேன்மையை எடுத்துரைத்து சபையை திகைக்கவைப்பவர். கடந்த 20 வருடங்களாக முச்சக்கரவண்டியில் ஆலயங்கள், சமய விழாக்கள், தமிழ் விழாக்கள், இந்தக்கல்லூரியின் பெயரால் நடைபொறும் வைபவங்கள் அனைத்திலும் பங்கு கொண்டு அனைவரையும் ஆனந்தப்படுத்தினார். சென்றமாதம் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர்சங்கத்தில் கண்டு பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பழைய மாணவர்களை ஒற்றுமைப்படுத்துவதில் ஓங்கிக்குரல் கொடுத்தார். ஒரு சமையம் ஒலிவாங்கியில் என் இனிய குழந்தைகளே ஒன்றுபட்டுக் கல்லூரி அன்னைக்காக உழைதிடுங்கள் எனவேண்டினார் இதுதான் இந்துக்கல்லூயில் இறுதியாக அவர் பேசிய பேச்சு. அன்று கூட கடும் வெய்யிலில் முற்சக்கர வண்டியில் கூட்டம் முடிந்துபோன காட்சி என்மனதை வருத்துகிறது. இறப்பதற்கு முதல் நாளும் வழமை போல நல்லூர் மேற்கு வீதியில் அவர் ஊர்வலம் வருவதைக் காண்பதற்கு காத்திருந்தார்கள். அவ்வேளை கண்தானம் செய்யும் படலத்தை நிரப்பி இறப்பிற்குப் பின்பும் பயன்பட வேண்டும் என்று கூறினார். நான் சிரித்துவிட்டு இன்னும் 20 வருடம் நீங்கள் உயிருடன் இருப்பீர்கள் என் முதுகைத்தடவினேன் சிரித்தார். சிரித்துவிட்டு எதற்கும் இருக்கவேண்டும் என்று கூறியவரை மறுநாள் வைத்தியசாலையில் அவரின் உடலை சுமக்கிற பாவியானேன் என் செய்வேன் இத்தகைய ஒரு மனிதனை இனிமேல் சந்திப்பது என்பது இயலாத ஒன்று எனி இனிய ஆசானை இனி எப்பிறப்பில் காண்பேன்?

குருவின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இந்துக்கல்லூரி அன்னையே இறஞ்சி அமைகிறேன்.

## "Oxfordல் சிவராமர்"

**கலாநிதி. நடா மணிவண்ணன்**
D.Phil (Oxford)

கடந்த வருடம் 2004 லண்டனில் நின்றிருந்த எமது பாசத்துக்குரிய சிவராமலிங்கம்பிள்ளை ஆசிரியரை யாழ். இந்து பழைய மாணவனாக, யாழ். இந்துக் கல்லூரி ஒன்றிய உறுப்பினராக அவர் தங்கி நின்ற வீட்டில் சென்று சந்தித்தோம். பல சுவாரசியமான சம்பவங்களை எமக்கு எடுத்து விளக்கிக் கொண்டிருந்தார். தான் நேசித்த யாழ். இந்துக் கல்லூரியையும், தமிழையும், தாய் மண்ணையும், எமது போராளிகளின் வீரம் செறிந்த விடுதலைப் போராட்டத்தையும் பற்றி அளவளாவிய எமது ஆசிரியர் தனது நீண்ட நாள் கனவு பற்றியும் எமக்கு எடுத்துக் கூறினார்.

அதாவது தமிழையும், சைவத்தையும் நேசித்து தமிழ் நாட்டில் பலகாலம் வாழ்ந்து தமிழிலும், சைவத்திலும் புலமை பெற்றிருந்த ஒரு சிறந்த ஆங்கில அறிஞர் கல்லறையைச் சென்று தரிசிப்பதாகும். அந்த வெள்ளைத் தமிழரின் பெயர் Dr. G.E. Pope என்பதாகும் அவரது கல்லறை Oxfordல் உள்ளது என்பதை மட்டும் அவர் அறிந்திருந்தார்.

நான் Oxfordல் சிலகாலம் கல்வி பயின்ற படியாலும் சிவராமலிங்கம் ஆசிரியர் தனது நீண்டநாள் கனவினை பூர்த்திசெய்ய அவரது மாணாக்கனான எனக்கு கிடைத்த அரிய சந்தர்ப்பமாகக் கருதி ஆசிரியர்கள் அவர்களை Oxfordக்கு கூட்டிச்செல்லும் பொறுப்பினை

மனமகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டேன்.

ஒரு காரில் ஆசிரியருடன் அவரது ஊர் நண்பர் ஒருவருடனும், வேறு யாழ். இந்து பழையமாணவன் ஒருவருடனும் Oxfordக்கு புறப்பட்டோம். Oxfordல் உள்ள நண்பர் ஒருவரிடம் தொடர்பு கொண்டேன். Oxfordல் Baliol Collegeல்தான் அமரர் Dr Popeன் சமாதி உள்ளதாக அறிந்து கொண்டோம். மிகவும் சிரமத்தின் மத்தியில், மிகவும் பாழடைந்த இடத்தில் அமரர். Dr Pope கல்லறையினை அடையாளம் கண்டுகொண்டோம். ஆசிரியர் அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. மிகவும் பரவசத்துடன் தனது நன்றியினைத் தெரிவித்தார். கல்லறையை உடனடியாக துப்பரவு செய்தோம். கொண்டு சென்ற மலர் மாலையினை ஆசிரியர் அவர்கள் கல்லறையில் சமர்ப்பித்து சந்தனம், மெழுகுவர்த்தி கொழுத்தி சில நிமிடம் மௌனமாக இருந்தார். ஆசிரியருடன் நாமும் Dr Popeற்கு அஞ்சலி செலுத்தினோம். தனது நீண்டநாள் கனவு நிறைவேற்றப்பட்டதை மீண்டும் மீண்டும் ஆசிரியர் அவர்கள் நினைவு கூர்ந்தார்.

Dr Popeன் தமிழ் சைவ அறிவு பற்றியும், அவர் எழுதிய சைவ, தமிழ் புத்தகங்கள் பற்றியும் பின்னர்தான் ஆசிரியர் அவர்கள் எடுத்து விளக்கினார். Oxfordலுள்ள Council Library சென்று Dr Pope தமிழைப்பற்றியும் சைவத்தைப் பற்றியும் எழுதிய நூல்களைப் பார்வையிட்டோம். பிற்பகல் ஆசிரியர் அவர்கட்கு Oxfordலுள்ள சில முக்கிய இடங்களைக் காண்பித்தோம். Oxford பயணம் முடித்து லண்டன் வந்து சேர இரவு 8மணி ஆகிவிட்டது.

எம் எல்லோரினதும் அன்புக்கும், பாசத்திற்கும் உரிய ஆசிரியர்கள் அவரது நீண்டநாள் ஆசையினை நிறைவேற்ற எமக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது மிகவும் மகிழ்ச்சி.

இன்று ஆசிரியர் எம்முடன் இல்லையென்பது துன்பமான உண்மை. அவர்களது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல யாழ். இந்து ஞானவைரவப் பெருமானை வேண்டி முடிக்கிறேன்.

# சிவராமலிங்கம் மாஸ்டரின் கண்கள் உடனடியாக தானம்

யாழ்ப்பாணம்,ஓக.26

நேற்றுக் காலமான மூத்த கல்விமான் சிவராமலிங்கம் அவர்களின் கண்கள் இரண்டும் உடனடியாகவே தானம் செய்யப்பட்டன.

அவரது விருப்பத்துக்கிணங்க இரு கண்களும் யாழ். போதனா வைத்தியசாலைக்குத் தானமாக வழங்கப்பட்டன.

'சிவபூமி' கண்தான சபை மூலமாக இந்தக் கண் தானத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

நேற்று மாலை யாழ். போதனா வைத்தியசாலை கண் வைத்திய சிகிச்சைப் பிரிவு வைத்தியர் செல்வி சரவணமுத்து சத்திரசிகிச்சையின் மூலம் சிவராமலிங்கத்தின் கண்களை அகற்றினார்.

பார்வை இழந்த ஒருவருக்கு இந்தக் கண்கள் பொருத்தப்படும் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-12)

நன்றி - உதயன், யாழ்ப்பாணம்

## யாழ்ப்பாணத்தில் வெளிவந்த சில அஞ்சலிக் குறிப்புகள்

### வணங்குகிறேன்



அறிவு தந்து அவைதனில் அரங்கேற்றி
அவனியில் சிறக்கவைத்த
ஆசிரியப் பெருந்தகைக்கு
இதய அஞ்சலிகள்.

மூதறிஞர்
க.சிவராமலிங்கம்பிள்ளை - ஆறு.திருமுருகன்

### கண்ணீர்க் காணிக்கைகள்



(25-08-2005) வியாழக்கிழமை காலமான
யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் உப அதிபர்
**கணபதிப்பிள்ளை சிவராமலிங்கம்பிள்ளை**
அவர்களின் மறைவினால் ஆழ்ந்த துயர்
அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெறப்
பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம்.

உரிமையாளரும் ஊழியர்களும்,
யாழ்ப்பாண வணிக நிலையம்,
யாழ்ப்பாண இரும்பகம்.

(39316)(46-42-14-15)

### சிந்தை நொந்து வருந்துகின்றோம்



இந்துவின் மைந்தன்
நல்லாசிரியன்
முன்னாள்....
ஆசிரிய கழகத் தலைவர்
விடுதிக் காவலர்
பிரதி அதிபர்
சைவத்தமிழ் வித்தகர்
க.சிவராமலிங்கம் பிள்ளை ஐயாவின் அமரத்துவமறிந்து சிந்தை நொந்து வருந்தும் நாம், குடும்பத்துயரிலும் பங்கேற்று அமரரது ஆத்மசாந்திக்காய்ப் பிரார்த்தனை செய்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

### இதய அஞ்சலி



பேராசான் சிவராமலிங்கம்

சைவத்தமிழ் உலகிற்கு சான்றோனாய் நின்ற பெருந்தகையின் ஆத்மா சாந்தி யடைய துர்க்கை அம்பாளை இறைஞ்சுகிறோம்.

கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி J.P. தலைவர்
ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

### இதய அஞ்சலி



யாழ்.இந்துக் கல்லூரியின் மூத்த மைந்தன்
**மூதறிஞர் க.சிவராமலிங்கம்பிள்ளை**

யாழ்.இந்துக் கல்லூரியின் மாணவராக, ஆசிரியராக, உப அதிபராக, பழைய மாணவர் சங்கத்தின் வழிகாட்டியாகத் திகழ்ந்த எங்கள் பேராசானின் மறைவு இந்துவின் மைந்தர்களை ஆழ்ந்தோராத் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

அன்னாரின் மறைவினால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

யாழ்.இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
யாழ்ப்பாணம்.

(F/44798)(21.15.17)

# யாழ்ப்பாணத்தில் வெளிவந்த சில அஞ்சலிக் குறிப்புகள்

## கண்ணீர் அஞ்சலி



மூத்த கல்விமானும், யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் உப அதிபருமான

**கணபதிப்பிள்ளை சிவராமலிங்கம்பிள்ளை**

அவர்கள் (25.08.2005) இறைபதம் அடைந்ததையிட்டு ஆழ்ந்த துயரடைவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:

ஆறுமுக சிற்பாலயம்,
திருநெல்வேலி.

கலாபூசணம் ஆ.ஜீவரட்ணம் ஸ்தபதி
குடும்பத்தினர்.

(19931)(30-21-17-15)

## பேராசானுக்கு எம் பிரிய அஞ்சலி



**கணபதிப்பிள்ளை சிவராமலிங்கம்பிள்ளை**

புங்குடுதீவின் புகழ்பூத்த குடியில் தோன்றி யாழ். இந்துவின் மைந்தனாய், ஆசிரியராய், உபஅதிபருமாய், மாணவருக்கு வழிகாட்டியாய், பலதலைமுறை போற்றும் பேராசானாய் விளங்கி மறைந்த பெருமகனாருக்கு எம் பிரிய அஞ்சலிகள்.

ஆசானின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு சபையின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**நீராவியடி,**
**யாழ்ப்பாணம்.**

*சைவபரிபாலன சபையினர்*

(F/44801)(21.17.15)

## மரண அறிவித்தல்கள்

*சைவசிகாமணி, தமிழ்மணி, சித்தாந்தபாரதி, கம்பகாவலன்*

*கணபதிப்பிள்ளை சிவராமலிங்கம்பிள்ளை*

*[முன்னாள் பிரதி அதிபர் யாழ்.இந்துக் கல்லூரி]*



புங்குடுதீவு, மூதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் குமாரசாமி வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு கணபதிப்பிள்ளை சிவராமலிங்கம்பிள்ளை அவர்கள் நேற்று (25.08.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் வைத்தியபூபதி, சித்தாந்த செம்மல் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (சின்னத்தம்பர்) செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான திருஞானம், நாகபூரணி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற ஞானபூரணி (ஆசிரியை)யின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவமோகன் மற்றும் ஞானசம்பந்தன் (சிவாஜி - சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் திவ்வியபவானியின் அன்பு மாமனாரும் சிவநயனி (கலைப்பிரிவு, யாழ் பல்கலைக்கழகம்), சிவசங்கரி (யாழ் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேரனும் புலவர் ஈழத்து சிவானந்தன் (கனடா) காலஞ்சென்ற திருமதி பர்வதபர்த்தினி, சோதிலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான திரு லிங்கநாதன் (முன்னாள் நிர்வாக சேவை அதிகாரி), குகராஜன் மற்றும் இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற சண்முகம் மற்றும் இரத்தினம் (நாகேஸ்வரி, ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'தணிகை'*
*28, குமாரசாமி வீதி,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*

(39313) (13.12.25)

தகவல்:
**திருமதி.சி.திவ்வியபவானி**
**(மருமகள்).**

# தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த உத்தமன்

**- அ.பி. மரியதாஸ் -**

குறிஞ்சி மலர் காலத்திற்கு ஒரு முறை எவ்விதம் பூக்கிறதோ அவ்விதம் மனித குலத்திலும் சிலர் தோன்றி மகத்தான சாதனைகள் செய்து தம்பிறப்புக்கு பெருமை சேர்க்கிறார்கள். அத்தகையவர்களில் ஒருவர்தான் அமரர் திரு. க. சிவராமலிங்கம் அவர்கள். தமிழ் ஈழத்தில் புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் யாழ். இந்துவின் சிறந்த மைந்தர்களில் ஒருவர். இந்துக்கல்லூரியின் மாணவனாய், ஆரம்பித்து ஆசிரியராய், உப அதிபராய்க் கடமையாற்றி ஓய்வு பெற்றார். இந்துவால் வளர்ந்து இந்துவை வளர்த்த பெருமை இவரையே சாரும்.

"கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்டு
எண்ணாற்றுங் கொல்லோ உலகு"

எந்தவித எதிர்பார்ப்புமின்ற உலகின் செழிப்புக்காய் விடாது பெய்யும் மழை கண்டு வியப்புறுகிறார் வள்ளுவர். இம்மாரிக்கு என்ன கைம்மாறு இவ்வுலகு இயற்றமுடியும் எனத் தன்வியப்பை வினாவாய் எழுப்பி அம்மாரியை ஒப்புரவானார் தம் உயர்வோடு ஒப்புடுகிறார். சமுதாய நன்மைக்காகப் பிரதிபலன் எதிர்பாராது மாரிபோல் மாற்றார்க்குத் துணைபுரியும் மாமனிதர்களில் திரு. சிவராமலிங்கம் ஒருவராகிறார்.

சைவமும், தமிழும் இவர் கண்கள் எனினும் நாவில் தமிழும், ஆங்கிலமும் பயிலுதல் இவரின் தனியழகு. அன்பு, கருணை, தன்னடக்கம் இவை மூன்று இவரின் அணிகலன்கள். இவர் தனது கல்வி கற்பித்தலின் போது மாணவர்களை வெறும் புத்தகப்பூச்சிகளாக மட்டும் உருவாக்காது. சமூக நோக்குள்ளவர்களாகவும், சமூகத்தைப் புரிந்து கொண்டு சமூக மாற்றங்களை உருவாக்குபவர்களாகவும் உருவாக்கினார். தன் தமிழறிவால் நவீனத்துக்கும், மரபுக்கும் சந்தி செய்த தமிழ் அறிஞர் ஆவார்.

இன்னலின் விழிம்பில் நிற்கும் ஈழத்தமிழரின் இடர்போக்க இறுதிவரை அயராது உழைத்தவர். ஈழ மண்ணுக்கு எல்லையற்ற சேவை செய்த இவர் மகிமை என்றும் நினைவு கூரப்பட வேண்டியதாகும்.

## எமது அஞ்சலிகள்

இந்துவின் மைந்தர்கள் சார்பில்
**ஏ.தேவநேசன்**
செயலாளர், பழைய மாணவர் சங்கம், யாழ்/இந்துக் கல்லூரி

புங்குடுதீவின் புகழ்பூத்த குடியில் பிறந்து, யாழ் இந்துவின் மாணவராக, ஆசிரியராக, உப அதிபராக, இளைப்பாறிய பின்னும் இந்துவின் இனிய மைந்தனாக, பழைய மாணவர் சங்கத்தின் புத்தூக்கியாக, கால்களின் நடைகள் தளர்ந்தபோதும் மனம் தளராத, மணம் கமழும் இனிய தமிழோடு, தமிழ்ப்பேச்சோடு வாழ்ந்த எங்களின் மூத்த மைந்தனின் உயிர்மூச்சு ஓய்ந்து போனதே!

சுமந்தபோதெல்லாம் பஞ்சாய் உணரவைத்த மாஸ்டர், மறைந்தபோது மட்டும் இதயச்சுமையாய்! ஓ! இது என்ன துயரம்!

ஓயாது ஓடிய ஊர்களின் முச்சக்கரச் சிறகளுமே கதறி அழும்போது எங்களின் துயரினை மாற்றுவார் யாரோ?

இருந்த போதெல்லாம் Master என்று ஓடிவந்து காணக்கிடைத்த எமக்கு, இறக்கும்போது மட்டும் சொல்லாமல் போன விந்தை தான் என்னவோ? உங்களின் இனிய நினைவுகள் மட்டும் போதும் என்று நினைத்தீர்களா?

இருந்தாலும் மறைந்தாலும்
பேர்சொல்ல வேண்டும்
இவர்போல யாரென்று
ஊர்சொல்ல வேண்டும்.

என்ற கண்ணதாசன் கவி வரிகளுக்கு உயிர்கொடுத்த ஆசான்.

மறைந்தாலும், மறக்காமல் எங்களின் நம்பிக்கையாய் எங்களுக்கு வழிகாட்டுவார் என்று நம்புகிறோம்.

அன்னாரின் குடும்பத்தவரின் ஆற்றொணாத் துயரிலும் பங்கெடுக்கிறோம்.

# உலகைக் கடந்து உள்ளங்களுள் நிறைந்தவர்

மிகுந்த பிரியமும் நன்றியுமுடைய மாணவன்
**லோகா பிரதாபன்.**

இவர் ஒரு சிகரம் வானுயரப் புகழ் வளர்ந்து வையகத்தைக் குனிந்து பார்க்கும் ஒரு மாபெரும் சிகரம்.

மிகுந்த கலைநயம் பொருந்திய திறமையானதொரு சிற்பி இவர். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் எண்ணற்ற அழகான சிலைகளைச் செதுக்கி உயிர் கொடுத்த ஆசான். இந்த நல்லாசானின் உளிபட்டு, கைபட்டு உயிர்பெற்ற சிலைகளுள் நானும் ஒருவன் என்பதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன். இதை என் பாக்கியமாகவே எண்ணுகிறேன்.

என் தந்தையையும் செதுக்கி என்னையும் செதுக்கிய-தால் இவர் என்னைச் செல்லமாகப் பேரன் என்பார். இதைச் சொல்லிக் கொள்ளும்போது என் மனதுள் மலர்ச்சியும் கர்வமும் ஒருங்கே நிற்கின்றன.

இவர் அண்மையில் லண்டனுக்கு வந்திருந்தபோது இவரைச் சில இடங்களுக்கு கூட்டிச் செல்லும் அரிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. இது என் வாழ்வில் மறக்கமுடியாததொரு அரும்பெரும் விசயம் என்றே எண்ணுகிறேன்.

Ealing கனகதுர்க்கையம்மன் கோயிலுக்குச் சென்றிருந்தபோது அவர் உரையாற்றக் கேட்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. இத்தனை வயதிலும் தெளிவான அவரது பேச்சும் விசயங்களைக் கோவையாகக் கோத்துச்சென்ற விதமும் அவரது ஆளுமையும் என்னை மிகவும் பாதித்தது. அந்தப் பொழுதுகளில் நான் யா.இ.கல்லூரியின் மாணவனாக இருந்த இனிய வசந்த காலத்திற்கு அழைத்துப்போனர். அவர் உரையாற்ற நான் கேட்டிருக்கும்போது அவரது வகுப்பறையில் இருக்கும் இனிய உணர்வு எனக்கு ஏற்பட்டது.

அவரோடு உலகப்பிரசித்தி பெற்ற Neasden சுவாமி நாராயணன் கோவிலுக்குச் சென்றிருந்தேன். அங்கே மூலஸ்தானத்திலிருந்து முகப்பிலுள்ள சிலைவரை அத்தனை அம்சங்களையும் மிகுந்த ஆவலோடு, இரசித்துப் பார்த்ததோடு அவற்றைப் பற்றியெல்லாம் மிகவும் விரிவான விளக்கங்களையும் எமக்குத்தந்தார். அவரிடமிருந்து இந்துமதத்திலுள்ள பல விசயங்களையும் அறிந்துகொள்ள முடிந்தது.

அவரின் விருப்பத்திற்கிணங்க WATFORD நகரிலுள்ள ஹரே கிருஷ்ணா மிஷனுக்குச் சென்றிருந்தோம். அங்கு ஆசிரியர்கள் மட்டுமின்றி வெளிநாட்டினரும் பூசை செய்வதைப்பார்த்து இந்து சமயத்தில் அவர்களுக்குள்ள பக்தியைப்பார்த்து மெய் சிலிர்த்துப்போனர். இது இந்து மதத்தின் மேல் அவர் வைத்துள்ள அளவு கடந்த பற்றைக் காட்டியது.

எமது யாழ் இந்து கல்லூரி மாணவர் ஒன்றியத்தின் அமைப்பை பெருமனதோடு ஏற்று விருந்துபசாரத்தில் கலந்துகொண்டு எமது ஒன்றிய அங்கத்தினர்களுக்கு உற்சாகம் கொடுத்ததையிட்டு நாம் மிகவும் பெருமையடைகிறோம். எமது ஒன்றியம் ஆரம்பித்தபோது அதன் யாப்புடன் யாழ் நகரில் உள்ள அவரது இல்லத்திற்குச் சென்று அவரது ஆசி பெற்றதையிட்டு நான் பெருமகிழ்வடைகிறேன். அவரது ஆலோசனைக்கிணங்க எம் ஒன்றியம் யா. இந்து கல்லூரிக்கென்று மட்டுமல்லாது எம் தமிழ் மக்களுக்கும் தமிழர் தேசிய போராட்டத்திற்கும் சேவை செய்யும் ஒன்றியமாக வெற்றிநடைபோடுகிறது.

பெருமதிப்பிற்குரிய அமரர்: சிவராமலிங்கம்பிள்ளை அவர்கள்

**தோன்றிற் புகளோடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலிற் தோன்றாமை நன்று**

என்ற குறளிற்கேற்ப காலங்களைக் கடந்து வாழ்பவர். மாதா,பிதா, குரு தெய்வம் என்பார்கள். எமக்கு முதல் மூன்றாகவும் இருந்து நாலாவதாக மாறியவர் இவர்.

இவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

## தாயினும் நல்லான்
## திருநந்தகுமார் (1967-1977)

நியூசிலாந்து

1969 ஆம் அண்டு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்திற்குப் பின்னால் உள்ள 8ஏ வகுப்பறையில் நான்! காலை மணி அடித்ததும் முண்டியடித்துக் கொண்டு வரிசையில் நின்று பிரார்த்தனைக்குச் செல்வதும் பெரும்பாலும் பக்கவாட்டில் அடுக்கப்பட்ட வாங்குகளின் வரிசையில் முன்பகுதியில் அமர்வதும் வழக்கம். வெள்ளிக்கிழமைகளிலும், சிறப்பு விழாக்களிலும் ஆசிரியர் பகுதியில் முதலில் வந்து சேரும் அந்த மனிதரைக் கண்டதும் நெஞ்சில் ஓர் இனம் புரியாத உணர்வு ஏற்படும். பள்ளிக்குச் செல்வதை சற்றுத் தயக்கத்தோடும், வெறுப்போடும் நோக்கிய நாட்கள் அவை. வீட்டு வேலை செய்யாமல் வந்து வாங்கிக்கட்டியவையும், இடையிடையே பள்ளிக்கு வராமல் நின்று கிடைத்த பரிசுகளும் நெஞ்சை கனக்க வைத்த நாட்களில் அந்த மனிதர் மட்டும் எப்படி எமக்கு ஆசிரியராக வராது போனார் என்று மனது ஏங்கிய நாட்கள் அவை.

கைத்தடியும், ஒரு மாணவனின் கையும் துணைகொண்டு, அடிக்கடி வாயினால் மூச்சை வெளியிட்டபடி மெல்ல மெல்ல அடியெடுத்து வைக்கையில் அவரின் முகத்தில் தோன்றும் சுமையின் ரேகைகள் பார்ப்பவர் உள்ளத்தை நெருடும். அன்புக் குழந்தைகளே என மாணவர் முன்னே வந்து அழைக்கையில் எல்லோர் நெஞ்சங்களும் அன்பில் நெகிழ்ந்து போவதுண்டு.

தூய வெள்ளை ஆடை; சிவந்த மேனி; பால் வெண்ணீறு அணிந்த நெற்றியில் அழகாக ஒரு சந்தனத் திலகம்; உள்ளத்தில் அன்பு வெள்ளம் -

இவற்றுக்கு சொந்தக்காரரான அந்தத் தமிழ் முனியைப் பெயர் சொல்லி அறிமுகம் செய்ய வேண்டியதில்லை. 1985ம் ஆண்டுவரையான சுமார் முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக யாழ். இந்துவில் தமிழையும், சமயத்தையும் கற்பித்ததோடு இந்து இளைஞர் மன்றத்தின் பொறுப்பாசிரியராகவும் கடமைபுரிந்து பிரதி அதிபராக இளைப்பாறி, இன்னமும் பொதுப்பணியிலும், தமிழ்ப்பணியிலும் தன் உழைப்பை நல்கிவரும் அவர் என் உள்ளங்கவர் கள்வனான சிவராமலிங்கம் அவர்கள். புங்குடுதீவின் புகழ்பூத்த வைத்தியர் சைவசித்தாந்த செம்மல் கணபதிப்பிள்ளையின் மூத்த புதல்வரான சிவராமலிங்கப்பிள்ளை அவர்கள் இந்த அன்னையின் மடியில் தவழ்ந்து கல்வி கற்றவர். சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்துவிட்டு யாழ். இந்துவில் ஆசிரியப்பணியை ஆரம்பித்தவர். திருமணமான சில காலத்திலேயே கொடிய நோய் ஒன்றுக்கு ஆளாகி ஒருகால் வழங்காதிருந்த போதும் தனது மனோ திடத்தாலும், திட சங்கற்பத்தாலும் என்றும் பிறர்க்குதவும் பெருந்தகையாக வாழ்ந்து வருகிறார்.

வகுப்பறைக்கல்வியை நான் அவரிடம் பெறாதபோதும் முறைசாராக்கல்வியை முறைபோல தமிழ், சமயம், இலக்கியம் என்பன உள்ளிட்ட வாழ்கைக்கல்வியை அவரிடம் பெற்றுக் கொண்டமை என் இளமைக்காலக் கனவை நனவாக்கியது. 1972ல் ஒரு பேச்சுப் போட்டிக்காக அவரிடம் தொடர்பு கொண்டேன். பின்னர் ஒரு முறை பிராத்தனை மண்டபத்தில் பேசுவதற்கு வாய்ப்புக்கேட்டு அவரிடம் சென்றேன். இவையெல்லாம் அவர்மீது கொண்ட தாகத்தை தணிப்பதாக இல்லை. கடேற் படையூடாக இந்துக்கல்லூாயில் நான் தலை நிமிர்ந்து நடந்த காலத்தில் அமரர் தேவன்-யாழ்ப்பாணம் அவர்களோடு ஏற்பட்ட தொடர்பு அவரின் அணுக்கத் தோழனான சிவராமலிங்கம் அவர்களிடம் என்னைச் சேர்ப்பித்தது. அப்போது அவர் விடுதி ஆசிரியராகப் பொறுப்பேற்றிருந்தார். 1975ல் இந்துக்கல்லூரியின் மாணவர் சஞ்சிகையான“இந்து இளைஞன் தமிழ்பகுதி ஆசிரியராக என்னை நியமிக்க சிவராமலிங்கம் அவர்கள் முடிவு செய்தகாலத்தில் இருந்து அவருடன் நேரடியாகத் தொடர்புகொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது.

இந்துக்கல்லூரி விடுதி அலவலகத்தில் ஆசிரியரைத்

தவறாது சந்திக்கும் சில தமிழறிஞர்களில் வித்துவான் வேலன், வித்துவான் ஆறுமுகம் ஆகியோரும் அடக்கம். இருவரும் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படித்தவர்கள் அவர்தம் ஆசிரியர் பெருமைகளை தமிழின் தனிச்சிறப்புக்களை, தமிழர் தம் வீரத்தை கொட்டுவார்கள். எமது ஆசானோ அவற்றைப் புன்சிரிப்போடு கேட்டுக்கொண்டிருப்பார். அவருக்குத் தெரிந்த செய்திகளே யானாலும் என்போன்ற மாணவர்கள் அங்கிருப்பதால் நாமும் பயன்பெறவேண்டும் என எண்ணினார் போலும்!

அழைக்கப்படும் எந்த விழாவிற்கும் தவறாது சென்றுவருவார். அவரோடு விழாக்களுக்குச் சென்றால் இரவுவேளைகளில் விடுதிக்கு வந்து அவர்அறையிலேயே தங்கி விடுவேன். அவர் உண்ணும்போது அவர்கையால் உணவைக்குழைத்து உறுண்டையாகத் தருவார். ஒருதாயினும் நல்ல ஆசான் என்று அவரைத் துதிக்கவைத்து இதுபோன்ற நிகழ்வுகள் எத்தனையோ என் மனத்திரையில் இப்போது விரிகின்றன.

கந்தர் மடத்தில் குமாரசாமி வீதியிலுள்ள அவர் வீட்டிற்கு எப்போது சென்றாலும் சாப்பிட்டாயா என்று கட்டாயம் கேட்டுவைப்பார். பசியோடு வந்தவர் எவராயினும் உணவு அளித்து மகிழ்விப்பார். அவர் உணவு உண்ணும்போது அவருடன் இருந்து அதனை இரசிப்பது எனக்குப் பலதடவை கிடைத்திருக்கிறது. இலையிலோ, தட்டிலோ இருக்கும் எதனையும் நன்கு இரசித்துச் சுவைத்துச் சாப்பிடுவார்.

அவர் எப்போது ஓய்வாக இருக்கிறார் என்று யாராலும் சொல்லமுடியாது. ஏதாவது எழுதிக்கொண்டே இருப்பார். சற்று அதிக உரிமை எடுத்துக்கொண்டு என்ன எழுதுகிறீர்கள் என்று கேட்டால் அதுஏதாவது கட்டுரையாக இருக்கும். அல்லது நவராத்திரி விழாவுக்கோ, சிவராத்திரி விழாவிற்கோ பள்ளிச்சிறுவர்கள் ஐந்து நிமிடம் பேசவேண்டிய பேச்சாக இருக்கும். இது அவருடைய மாணவர்கள் எவருக்கும் அல்ல அவரது அயலவர்கள், உறவினர்கள், நண்பர்களின் பிள்ளைகளுக்காக இருக்கும். " உங்களுக்கு ஏன் இந்த வேலை? முடியாதப்பா! என்று ஒரேவார்த்தையில் சொல்வதுதானே என்று நாம் கேட்டால் முறைத்துப்பார்த்து "சும்மாஇரு" எனக் கட்டளையிடுவார். ஒருமுறை இப்படி எழுதும்போது

அவரை "ஏன் இந்த வேலை" எனக்கேட்டேன் இருக்கும்வரை முடிந்ததைச் செய்வோம் சின்னப்பிள்ளைகள் மனனம் பண்ணி அது பதிந்துவிட்டால் தமிழை, சமயத்தை படிக்க ஆர்வம் வருமல்லவா என சிரித்தபடி சொன்னார்.

இலங்கையின் இடதுசாரிக் கட்சியான சமசமாசக் கட்சி மீது அவருக்கு இருந்த ஈடுபாட்டையும், நம்பிக்கையையும் அவர் நண்பர்கள் மூலம் கேள்விப்பட்டபோது எனது அதிர்ச்சிக்கு அளவில்லை. இடது சாரிகள் எல்லாம் பெரும்பாலும் நாத்திகர்களாக இருக்கையில் நீங்கள் மட்டும் எப்படி...... என்று ஒருமுறை கேட்டேன். இடது சாரித் தத்துவத்தை உண்மையாகப் புரிந்து கொண்டதால் ஆத்திகத்திற்கும் அதற்கும் முரண்பாடு வர வாய்ப்பில்லையே என்றார் அது சரி. இடதுசாரிகளின் தொடர்பை இப்போது காணவில்லையே என்று கேட்டதற்கு அது எனி நமக்கு சரிப்பட்டு வராது என்றார். மொழிக்கொள்கையில் இடதுசாரிகளின் குழப்பமான நிலைப்பாடு ஆசிரியரை பெரிதும் பாதித்து விட்டது எனப் பின்னர் அறிந்துகொண்டேன்.

இந்துக்கல்லூரியின் முக்கியமான வருடாந்த விழாக்களுக்கு புகழ்பூத்த பழைய மாணவர்களை அழைத்து அவர்களையும் மகிழ்வித்து தானும் பெருமை கொள்வது இந்துக்கல்லூரி சமூகத்தின் மரபு. (இப்போதும் இம்மரபைப் பேணப்படுகிறது என்றே நம்புகிறேன்.)

இலங்கைப் பல்கலைக் கழக யாழ்ப்பாண வளாகத்தின் முதலாவது தலைவராகப் பதவியேற்ற பின்னர் ஒரு பரிசளிப்பு விழாவிற்குப் பிரதமவிருந்தினராக பேராசிரியர் கைலாசபதி அவர்கள் வந்திருந்தார். விழா ஆரம்பிப்பதற்கு முன்பாக ஆசிரியர்களுடன் ஒரு தேநீர் விருந்து நடைபெறும். அதில் ஆசிரியர்கள் பிரதமவிருந்தினருக்கு அறிமுகம் செய்து வைக்கப்படுவர் பேராசிரியர் கைலாசபதியுடன் சென்ற அதிபர் சபாலிங்கம் அவர்கள் ஒவ்வொருவராக ஆசிரியர்களை அறிமுகம் செய்துகொண்டு வருகிறார். எமது ஆசான் சிவராமலிங்கம் அவர்களை நெருங்கியதும் "இவர் திரு. சிவராமலிங்கம்........ என முடிக்கமுன்னரே" இவர் எனது ஆசான்" என மகிழ்ச்சிபொங்கக் கூறி அவர்கைகளைப் பற்றி நீண்ட நேரம் விசாரித்தாராம் பேராசிரியர். இச்சம்பவத்தைப்

பற்றி குறிப்பிடும்போதெல்லாம் எமது ஆசிரியர்பிரானின் உள்ளத்தில் தோன்றும் உவகையை என்னால் உணரமுடிந்தது.

மாணவர்கள் தமது ஆசிரியரைப்பார்த்து "உங்களால் நான் நல்லாயிருக்கிறேன்" என்று சொல்லும்போதோ, "இவர் எனது ஆசிரியர்! எனச் சுட்டும்போதோ கிடைக்கும் மகிழ்ச்சி உண்மை ஆசிரியனுக்கு வேறெதிலும் கிடைக்காது என்பார் சிவராமலிங்கம் அவர்கள் பின்னாளில் யாழ் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதியாக வந்த பேராசிரியர் பாலசந்தரம் பிள்ளையும், தனது ஆசான் சிவராமலிங்கம் அவர்களை கலைப்பீடப் பேரவையில் உறுப்பினராக்கிப் பெருமையைப் பகிர்ந்துகொண்டார். பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை அவர்கள் இப்போது யாழ் பல்கலைக்கழகத்தின் துணைவெந்தர் பதவியில் இருக்கிறார். ஈன்றதாயை விடப் பெரிதுவப்பார் ஆசிரியர் என்பதை அவரோடு இருப்பவர்கள் அறிவர். ஆசிரியன் அன்பிற்குகந்த இன்னோர் மாணவர் சுந்தரம் திவகலாலா அவர்கள் தேவதாஸ் என அவரை அழைக்கும் ஆசிரியர் " இவன் பெரிய பதவியில் அமருவான்" என அப்போது சொல்லிக்கொள்வாராம். பின்னாளில் வடக்குக் கிழக்கு மாகாண கல்விச் செயலாளராக அவர் பொறுப்பேற்று தன் ஆசிரியரையும் தன் கல்லூரியையும் பெருமைகொள்ளச்செய்தார்.

எனது பள்ளி நண்பர்கள் ஜெயராஜ், குமாரதாசன், வசந்தன், மாணிக்கம், சிவலோகராசா, இரட்னகுமார் போன்றவர்கள் பள்ளிவிட்டு விலகியநாட்களில் ஒன்றாக இணைந்து ஒரு இலக்கிய அமைபப ஒன்றை கம்பன் பெயரில் ஆரம்பிக்க வெண்டும் என நினைத்தோம். அது 1980 மே 22ல் சாத்தியமாகிற்று. அகில இலங்கைக் கம்பன் கழகமெனப் பெயரிட்டு மகிழ்நதோம் கம்பனா? அப்படி ஒரு கழகமா? என வாயைப்பொத்தி சிரித்த பெரிய மனிதர்கள் ஏராளம். எமது ஆசான் மட்டும் எம்மோடு ஒரு காப்பாளராக அன்று முதல் இருந்து வருகிறார். உண்மையில் அவர் எமக்கு அவ் அப்போது ஊட்டிவிட்ட கம்பன் கவியமுத இரசனையே எம்மைக் கம்பன்மீது நெறிப்படுத்தியது. 1960களில் யாழ்ப்பாணத்தில் இயங்கிய இலங்கைக் கம்பன் கழகத்தில் ஆசிரியர்கள் சொக்கன் தேவன்- யாழ்ப்பாணம் போன்றேருடன் இணைந்து பணியாற்றியவர் சிவராமலிங்கம் அவர்கள் என்பதால்

எமக்கு இரட்டிப்புப்பலம் கிடைத்தது போல!.

பட்டி மண்டபங்கள் ஆசிரியர் தேவன் யாழ்ப்பாணம் தலைமையில் நடந்தால் சிவராமலிங்கம் ஆசிரியருக்கு ஜெயராஜூம் அதில் வாதிடுவார்கள். ஓரணியில் இல்லாது போனால் சிவராமலிங்கம் அவர்கள் மீது ஜெயராஜ் தொடுக்கும் கேள்விக்கணைகள் ஏராளம். புன்சிரிப்போடு அவற்றை இரசித்தபடியே இருப்பதும் தன் வாய்ப்புக் கிடைக்கும்போது பாராட்டுவதும் ஆசிரியரின் தனிப்பண்புகள். எண்பதுகளில் கம்பன் கழகம் சார்பில் நாம் கிராமங்கள்தோறும் பட்டிமண்டப நிகழ்ச்சிகளை நடத்தத் தொடங்கியபோது ஆசிரியரை ஒரு அணிக்குத் தலைவராக்கி விடுவோம். நண்பர் ஜெயராஜ் பட்டி மண்டப நடுவராக இருப்பார். தன் மாணவர்களை தனக்கு மேல் வைத்துப்பார்த்து மகிழ்வதில் அவருக்கு நிகர் அவரேதான்.

1975இல் இந்துக்கல்லூரிக்கு அதிபராக பொ.க.குமாரசாமி (பி.எஸ்) அவர்கள் வந்திருந்தார் அவரும், ஆசிரியரும் பள்ளித்தோழர்கள் நட்புரிமையோடு ஆசிரியரின் இருப்பிடம் நோக்கி அதிபர் வந்தாலும் அதிபர் என்ற உறவுக்குரிய தூரத்தைப்பேணுவதில் ஆசிரியர் தவறவில்லை. அவர் பொறுப்பேற்ற சில நாட்களிலெயே புதிய பிரதி அதிபர் ஒருவரை நியமிக்க வேண்டி வந்தபோது ஆசிரியர் சிவராமலிங்கம் அவர்களையே தன் பிரதி அதிபராக்க பி.எஸ் விரும்பினார். பி.எஸ் எதிர்கொண்ட பிரச்சனையோ வேறுவிதமானது. ஒரே சேவை மூப்புள்ள இருவரில் யாரைப் பிரதி அதிபராக்குவது என்பது அவர் பிரச்சனை. அதற்கு மாற்று வழி இவர்களிலும் சேவை மூப்புள்ள நமது ஆசிரியரை நியமிப்பதுதான்.

இந்தக் கால் ஏலாத என்னை வைத்துக்கொண்டு என்ன செய்யப்போகிறீர்கள்? நான் தான் என்ன செய்யமுடியும்? என நயமாக ஆனால் திடமாக மறுத்துவிட்டார் ஆசிரியர். இறுதியில் நீண்ட ஆலோசனைக்குப் பிறகு பி.எஸ் எடுத்த முடிவை ஆசிரியரிடம் சொன்னபோது இதை விட வேறுவழி என்ன இருக்கிறது? அப்படியே செய்யுங்கள் என்றார் சிவராமலிங்கம். அது என்ன வழி? இருவரையும் பிரதி அதிபர்களாக்கி நிர்வாக அதிகாரங்களை இருவருக்கும் பகிர்ந்தளிப்பது இதன் மூலம் பிரதி அதிபரான ஒருவர் ஆசிரிய பிரானின் உற்ற நண்பர். மற்றயவர் ஆசிரியரின் மாணவர் தனது மாணவன்

பிரதி அதிபராக பதவி வகிக்க அவரின் கீழ் பணியாற்றும் அனுபவம் எல்லோருக்கும் கிடைத்துவிடாது என்று சொல்லிப் பெருமைப்பட்டுக்கொள்ளுவார் ஆசிரியர்.

1984இல் அதிபர் பொ.ச. குமாரசாமி ஓய்வுபெற்றதும் பிரதி அதிபர் பொன்னம்பலம் அவர்கள் அதிபரானார். பிரதி அதிபர்களைத் தேர்வு செய்யும் வேலை அவருக்கும் வந்த போது தனது ஆசிரியரான சிவராமலிங்கம் அவர்களையே அவரும் விரும்பினார். ஆசிரியரும் அதற்குச் சம்மதித்தார். முன்பு எனது நண்பர் வேண்டுகோள் விடுத்தபோது அதனை ஏற்கவில்லை, எனது மாணவன் கேட்கும்போது என்னால் மறுக்கமுடியவில்லை என்று அவர் அப்போது சொன்னார். தனது மாணவர்களின் கோரிக்கைகளை புறக்கணிக்கமுடியாத தாய்மையுள்ளம் அவருடையது என்பதற்கு இது ஒரு சான்று. ஒரு ஆசிரியராக ஓய்வு பெற விரும்பிய அவர் தனது மாணவனுக்காக பிரதி அதிபர் என்ற பதவியை அலங்கரித்து அதற்குப் பெருமை சேர்த்து ஓய்வு பெற்றார்.

கம்பன் விழாக் காலங்களில் ஒருமுறை அவரின் பிரதி அதிபர் அனுபவம் எப்படி என்று கேட்டேன். பொன்னம்பலத்தின் கீழ் பணியாற்றியதும், ஜெயராஜின் தலைமையில் பட்டி மண்டபம் பேசியதும் என் வாழ்க்கையில் எனக்கக்கிடைத்த பெரும்பேறு. ஒரு ஆசிரியனுக்கு இதனைவிடப் பெருமைதரக்கூடியது வேறு என்ன? எனக் கேட்டார் அவர்.

அவரின் அன்பிற்கும் நெருக்கத்திற்கும் உரிய சில மாணவாகள் ஈழப்போரில் களப்பலியானார்கள். "எம்மைவிட எத்தனை மடங்கு நெஞ்சுரம் மிக்கவர் அவர் என்று அவர்கள் பெருமையையும் தியாகத்தையும் என்றும் போற்றி வருபவர் எமது ஆசிரியப்பிரான் புத்திர சோகத்தை தன்வாழ்க்கையில் அனுபவித்த ஆசிரியர் தன்மாணவர்கள் தன்னை வாழ்த்தி வணங்குவதனால் தெம்பு பெறுகிறார்.

தம்பிமாரே! எனி என்னால் உங்கள் சைக்கிளில் ஏறி இறங்க முடியாது. ஒரு முச்சக்க வண்டி ஒன்று கிடைக்குமா என்று பாருங்கள் புதிதாக வேண்டின் அதிக செலவாகும் பாவித்த வண்டியாயின் கட்டுபடியாகும்" என ஒருமுறை சொன்னார். இது நடந்தது எண்பதுகளின் ஆரம்பத்தில் நாமும் முச்சக்கர வண்டி தேடிக்கொண்டிருந்தோம்.

அப்போது எனது மைத்துனர் காங்கேசந்துறையிலுள்ள லங்கா சீமெந்து நிறுவனத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தார். லங்கா சீமெந்தின் ஊழியர் நலன்புரிச்சங்கம் முச்சக்கர வண்டியொன்றை உருவாக்கி அதனை ஒருவருக்கு வழங்கிய செய்தி பத்திரிகை மூலம் அறிந்து கொண்டேன் எனது மைத்துனர் **மூலம்** எனது ஆசிரியர்பிரானுக்கு குறைந்த செலவில் **ஒரு வண்டி** தயாரித்துக் கொடுக்கமுடியுமா எனக் **கேட்டேன்.** அவர் ஊழியசங்கப் பொறுப்பாளர்களூடாக அணுகி ஆகவேண்டியதைப் பாருங்கள் என்றார். **ஊளியர்**சங்கத்திற்கு ஒரு கடிதம் ஆசிரியர் பெயரில் அனுப்பிவைத்தோம் அங்கும் ஆசிரியரின்மாணவர்கள் சிலர் இருந்தனர். அவர்கள் மூலம் ஆசிரியருக்கு ஒரு புதிய முச்சக்கர வண்டீ அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அதற்கென ஒழுங்கு செய்யப்பட்ட வைபவத்தில் சில மாணவர்களுடன் நானும் சென்றிருந்தேன். ஏற்புரையில் ஆசிரியர் நிகழ்த்திய இலக்கியச் சிறப்புவாய்ந்த உரையை சபையிலுள்ளோர் மெய்மறந்து கேட்டு இரசித்தனர். வசதி குறைந்தவர்களுக்கென்று இது வரை அன்பளிப்புகள் செய்தோம், இன்று தமிழுக்கு தொண்டாற்றும் ஒரு அறிஞருக்கு இதனை வழங்குகிறோம். அவர் மூலம் தமிழ்ப்பணியில் நாமும் இணைந்து கொள்கிறோம் எனக்குறிப்பிட்டனர் ஊழியர் சங்கத்தினர் லங்கா சீமெந்துத் தொழிற்சாலை இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்ததும் செயற்பட முடியாது போய்விட்டது. இன்னமும் லங்கா சீமெந்து ஊளியர் சங்கத்தின் பெயரால் அந்த முச்சக்கர வண்டி எம் ஆசிரியர்பிரானைச் சுமந்தபடி யாழ் நகர வீதிகளை வலம் வருகிறது.

நான் நினைத்து செய்யமுடியாது போன விடயங்கள் சில உண்டு. யாழ் இந்துக்கல்லூரிச் சமூகத்தின் செயற்கரிய செய்கைகளை எழுத்தில் வடிப்பதும் அதில் ஒன்று. ஆசிரியர் சிவராமலிங்கம் அவர்களுடன் நான் கழித்த காலங்களில் அவர் தனது பழைய நினைவுகளை மீட்டு எடுத்தியம்பும் அற்புதமான செய்திகளும், கதைகளும் யாழ் இந்துசமூகம் எப்படி முற்போக்காக நடந்து கொண்டது என்று சான்று கூறும். தற்போது யாழ்ப்பாணத்திலுள்ள யாழ்-இந்து மைந்தர்கள் யாராவது இப்பணியைச் செய்யவேண்டும். ஆசிரியர் சிவராமலிங்கம் அவர்களை அணுகி யாழ் இந்து அன்னை பற்றிய செய்திகளை அவ் அப்போது

ஒலிப்பதிவு செய்து கொண்டால் ஒரு அற்புதமான வரலாற்று இலக்கியம் படைக்கலாம் என்பது எனது கருத்து. ஆசிரியர் சிவராமலிங்கம் அவர்களின் அயராத தமிழ்ப்பணியையும், சைவப்பணியையும் பாராட்டாதவர்களே இருக்கமுடியாது. எழுபத்தைந்து அகவையைப் பூர்த்திசெய்திருக்கும் இவர் இன்னமும் தமிழிற்காகவும், தான் சார்ந்த சமூகத்திற்காகவும் பாடுபட்டு வருகிறார். அவரின் பொதுப்பணியையும், கம்பன்பணியையும் கௌரவித்து கொழும்புக் கம்பன்கழகம் இந்த ஆண்டிற்கான கம்ப காவலர் விருதை சித்திரை 2000ல் நடந்த கம்பன் விழாவில் அவருக்கு வழங்கிப் பெருமைகொண்டது.

யாழ் இந்துக்கல்லூரி வரலாற்றில் ஆசிரியர் சிவராமலிங்கம் அவர்கள் ஒரு சகாப்தம்.

# 80 வயது இளைஞன்

தினக்குரல் பத்திரிகையில் இந்துவின் மைந்தன் ஒருவர் எழுதியது மீள்பிரசுரிக்கப்படுகிறது

விமான நிலையத்திலிருந்த அத்தனை பேரது கண்களும் ஒரு நிமிடம் அவரையே பார்த்தன. சில கண்களில் வியப்பு; சில கண்களில் பரிதாபம் இரண்டு கால்களும் நடக்க முடியாத அந்த 80 வயது முதியவரை ஓர் விமானச் சிப்பந்தி சக்கர நாற்காலியில் வைத்து தள்ளிக்கொண்டு வருகிறான். வெறும் நாலுமுழ வேட்டி, கதர்ச் சட்டை, நெற்றியில் விபூதி, பயணக்களைப்பிலும் முகத்திலும் ஓர் செழிப்பு. சக்கர நாற்காலிக்குள் அடங்காத பருத்த சரீரம். கூட வரும் பிரயாணிகளின் உரையாடலிருந்து விமாணம் லண்டனிலிருந்து வந்திருப்பது தெரிய வருகிறது. இந்த நடக்க முடியாத பெரியவர் லண்டன் போய் வந்திருக்கிறாரா? சிலர் கண்களில் தெரிந்த வியப்பின் பின்னணி இது. வேறு சிலர் கண்களில் லண்டனில் இருக்கும் பிள்ளைகளால் கைவிடப்பட்டு இலங்கையின் ஏதோ ஒரு முதியோர் இல்லத்திற்கு வருகிறார் போலும் என்ற இரக்கப்பார்வை. யார் அந்தப் பெரியவர்? கேள்விக்குமான விடை ஆச்சரியமானது.
அவர்தான் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டதாரி, இந்துக் கல்லூரியின் முன்னாள் உபஅதிபர். கம்பன் கழகத்தை வளர்த்தெடுத்த போசகர். வேதாந்த மடத்தின் உறுப்பினர். சேக்கிழார் மன்றத்தினதும் சைவபரிபாலனசபையினதும் உபதலைவர். சைவ சித்தாந்தப் புலவர். சிறந்த பேச்சாளர். ஆங்கிலத் துறை வல்லுநர். யாழ் பல்கலைக்கழக ஆளுநர்சபை முன்னாள் உறுப்பினர். இப்படிப் பல பொறுப்புக்களையும் ஏற்று மிகப் பெரிய சமூகத்தொண்டராய், முதிர்ந்த தனது 80 வயதிலும் முச்சக்கர வண்டியில் ஓடி ஓடி மக்களுக்காய் உழைக்கும் சிவராமலிங்கம் பிள்ளை.

விமான நிலையத்திற்கு அவர் ஏன் வந்தார் என்கிறீர்களா? சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள். லண்டனில் உள்ள யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் தனது கலை விழாவுக்கென பிரதம விருந்தினராய் அவரை அழைத்திருந்தது. அந்த அழைப்பு வந்ததும் நாங்கள் நடக்க முடியாத கால்களோடு இந்த வயதில் அவரால் இவ்வளவு தூரம் தனியே பயணம் செய்ய முடியுமா என ஜயப்பட்டோம். உள்ளூர கவலைப்பட்டோம் என்று சொன்னாற்கூடப் பொருந்தும். யார் எதைக் கேட்டாலும் செய்து தருகிறேன் என்று வாக்குக்கொடுக்கும் பழக்கத்தால் 'சரி வருகிறேன்' என்று சொல்லி விட்டார் அவர். 'உங்களால் எப்படித் தனியே போக முடியும்' கடுமையாய் ஆட்சேபித்தேன். என் ஆட்சேபனை லண்டன் வரை போனது. உடனே அவரது மாணவனான லண்டனில் வாழும் புகழ்பெற்ற டாக்டர் சோதிலிங்கம் 'நானே வந்து அழைத்து வருகிறேன் அஞ்சவேண்டாம்' என அபயமளிக்க முன் வந்தார்.

ஆறுதல் படலாமென்றால் மீண்டும் பிரச்சினை. சற்று உடல்பருத்தவரான இவரால் சாதாரண விமானப் பயணிகள் இருக்கையில் இருந்து பல மணிநேரம் பயணம் செய்ய முடியுமா? 'பிஸ்னஸ்' வகுப்பு இருக்கைதான் வேண்டும். முடிவு

செய்து அதற்கான விமான டிக்கட்டை விசாரித்தால் அது சாதாரண விமான டிக்கட்டை விட இரண்டு மடங்கு அதிகம் எனத் தெரிய வந்தது. இலட்சங்களால் வித்தியாசப்படும் அச்செலவை யார் பொறுப்பேற்பார்கள். மீண்டும் பிரச்சினை, இப்பிரச்சினை லண்டனுக்கு அறிவிக்கப்பட்டது. 'ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம்' மறுநாளே அங்கிருந்து பதில். 'மாஸ்டரின் மாணவனான கொழும்பு வர்த்தகர் வெங்கடாசலம் அச்செலவைப் பொறுப்பேற்கிறார். நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டும்' என்று தொலைபேசியில் செய்தி வந்தது.

'அப்பாடா' என்று மூச்சு விடுவதற்குள் அடுத்த பிரச்சினை இடியாய் இறங்கியது. பயணத்திற்கு 15 நாள் இருக்கையில் கடுமையான வயிற்றுவலிக்கு ஆளானார் ஆசிரியர். யாழ்.வைத்தியசாலை டாக்டர்கள் 'கேனியா" உடனடியாகச் சத்திரசிகிச்சை செய்ய வேண்டும் என்று சொல்லி, என்ன செய்யலாம் என நாம் சிந்திப்பதற்குள் சக்திரசிசிச்சை செய்துமுடித்து விட்டார்கள். என்ன செய்வது என்று தெரியாமல் லண்டனில் பழைய மாணவர் சங்கம் தவிக்க, கொழும்பிலிருந்து நாங்கள் தவிக்க, பத்தே நாட்களில் ஆசிரியரிடம் இருந்து தொலைபேசி 'காயம் முழுசா மாறிட்டுது. பயணத்திற்கு ஆயுத்தப்படுத்துங்கோ நாளைக்கு கொழுப்பு வருகிறன்' போன் வைக்கப்படுகிறது. உண்மையில் நாம் சற்று மிரண்டு தான் போனோம். 80 வயதில் சத்திரசிகிச்சை முடிந்து பத்தே நாட்களில் பூரணசுகமாகி அடுத்த வாரத்தில் ஒருவர் லண்டன் பயணமாகிறார் என்றால் நீங்கள் நம்புவீர்களா? சத்தியமாய் அந்த அதிசயம் நடந்தது. அது தான் சிவராமலிங்கம் மாஸ்டரின் தனித்துவம்.

எந்தச் சோதனை வந்தாலும் அதை எதிர்த்து நின்று 'காலா சற்று வந்து பார் என்னைக்கெட்டவே' என சவால் விடுகிற துணிவு அவருடையது. அவரது வாழ்க்கை முழுவதும் போராட்டம்-சாவல்-வெற்றி என்ற 'போமிலாவிற்குள்' அடக்கி விடலாம். இந்தியாவில் பட்டப் படிப்பை முடித்து, துள்ளும் இளைஞராய் ஓடிவந்து, காதலித்துத் திருமணம் செய்த பத்தே நாட்களில், பாரிசவாதத்தால் கால்கள் செயல் இழந்ததாம். வேறு யார் என்றாலும் வாழ்க்கையே முடிந்தது என்று வீழ்ந்து போயிப்பர். வைத்தியம் செய்த டாக்டரே ஆச்சரியப்படும் அளவுக்கு சில நாட்களிலேயே நிமிர்ந்தாராம். கைத்தடியின் உதவியுடன் நடக்கத் தொடங்கி, பின் இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தையாகி சாதாரண ஒரு குடும்பத் தலைவனை விடப் பத்து மடங்கு அக்கறையுடன் தன் மனைவி மக்களைக் காத்து, யாழ்.இந்துக்கல்லூரி என்ற பெரிய ஆல விருட்சத்தில் அசையாத விழுதுகளில் ஒன்றாய் நின்று, முப்பது ஆண்டுகளுக்கு மேல் ஆசிரியப் பணியாற்றி, ஆயிரக்கணக்கான மாணவர்களை உருவாக்கி, உலகெங்கும் அவர்களை தலைநிமிர்ந்து நடக்கச் செய்த பலம் கொண்ட அவருக்கு சோதனையும், சாதனையும் மிகச் சாதாரணம். கல்லூரியில் நாங்கள் படிக்கும்போது மாணவர்களின் கைகளைப் பிடித்தபடிதான் நடந்து வருவார். 'அவர் மாணவர்களில் தாங்கி வருகிறார் என்று நினையாதீர்கள். மாணவர்களைத்தான் அவர் தாங்கி வருகிறார்' என்று என் நண்பர்களிடம் நான் கூறுவேன். ஆசிரியருக்குக் கைகொடுக்க என்றும் சில மாணவர்கள் இருப்பார்கள். அப்படிக் கைகொடுத்த அத்தனை பேரையும் பின்னாளில் அவர் கைகொடுத்து உயர்த்தி விட்டார்.

யாழ்.இந்துக் கல்லூரியில் எத்தனையோ ஆசிரியர்கள் இருந்தனர். அவர்களில் ஒரு சிலருக்கு மட்டும் கற்பிப்பதோடு சமூகத்தையும், கல்லூரியையும் இணைக்கின்ற வேலையும் வழங்கப்பட்டிருந்தது. அவர்களில் முதலிடம் சிவராமலிங்கம் மாஸ்டருக்குத்தான். நல்ல அதிபரைக் கொண்டு வர வேண்டுமா? கல்லூரியோடு முரண்படும் அதிகாரிகளுக்குப் பதில் சொல்ல வேண்டுமா? எல்லாம் சிவராமலிங்கம் மாஸ்டரின் பின்னணியில் தான் நடைபெறும். கல்லூரிக்குள் மட்டும் தான் என்று இல்லை. சமூகத்தின் எந்தப் பிரச்சினையானாலும் நடக்கக் கூடியவர்கள் எல்லாம் முடமாகி உட்கார்ந்து விட முடமான இவர் பிரச்சினைகளின் முன் நடப்பார்.

இப்போதும் ஞாபகம் இருக்கிறது. யாழ். பல்கலைக்கழகம் ஆரம்பித்த காலம். பேராசிரியர் வித்தியானந்தன் துணைவேந்தராய் இருந்தார். பல்கலைக்கழக மாணவர்களுக்கும் திருநெல்வேலி இளைஞர்களுக்குமிடையில் ஏற்பட்ட மோதல் பெரும் கலவரமாய் வெடித்தது. மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குள் சிறை வைக்கப்பட்டனர். வெளியே வந்தால் அவர்கள் தாக்கப்படும் அபாய சூழ்நிலை. ஒன்றும் செய்ய முடியாத நிலைமையில் பொலிஸ் வரவழைக்கப்படுகிறது. பல்கலைக்கழகத்தின் சார்பில் பேராசிரியர் வித்தியானந்தன் உயர் பொலிஸ் அதிகாரியோடு வருகிறார். பேராசிரியராய்ப் பெருமைப்பட்டுக் கொள்ளும் பலரையும் அந்த இடத்தில் காணமுடியவில்லை. நடக்க முடியாத நிலையிலும் அங்கு சிவராமலிங்க மாஸ்டரின் பிரசன்னம் நிகழ்கிறது. கடுங்கோபத்துடன் ஆங்கிலமும் தமிழுமாக அன்று அவர் வாயிலிருந்து வெடித்துக் கிளம்பிய வார்த்தைகள் பேராசிரியரையும் பொலிஸ் அதிகாரியையும் கூட நடுக்கத்துடன் தலைகுனிய வைக்கிறது. அந்த ஆண்மை சிவராமலிங்க மாஸ்டரிடம் மட்டுமே காணக்கூடிய ஆண்மை.

அவ்வளவேன்? அண்மையில் சமாதானச் சூழ்நிலை தோன்றிய பிறகு விடுதலைப் புலிகளின் அரசியல் பணிமனை திறக்கப்படுகிறது. அந்தச் சூழ்நிலையில் அங்கு போகலாமா? என்ற ஐயத்தோடு பலர் மிரண்டு நிற்க, அவர்கள் அழைப்பை ஏற்று, துணிந்து சமூகப் பிரதிநிதியாய் நாடா வெட்டி அப்பணிமனையைத் திறந்து வைத்தவர் சிவராமலிங்கம் மாஸ்டர் தான். அதுதான் அவரின் தனிச் சிறப்பு. எல்லாருக்கும் அவர் நண்பர். எவ்வளவு பெயரியவர்களானாலும் அவர்கள் பிழையைச் சுட்டிக் காட்டத் தயங்காதவர். அதே நேரத்தில் அவர்களுக்கு ஒரு துன்பமென்றால் முதல் ஆளாக ஓடிவந்து கைகொடுப்பவராயும் இருப்பவர்.

அவர் வெறும் தமிழாசிரியர் தான். ஆனால், பல ஆங்கில ஆசிரியர்களும் அவரிடம் பாடம் கற்க வேண்டும். அந்த அளவு ஆ மொழிப் புலமை கொண்டவர். பல தமிழாசிரியர்களிடம் இருந்து வேண்டாத கட்டுப்பாட்டுத்தனங்கள் அவரிடம் என்றும் இருந்ததில்லை. இந்துக் கல்லூரியில் எந்த புதுமையையும் முதலில் வரவேற்பவர் அவராய்தான் இருப்பார். 1960களில் குன்றக் குடியடிகளாரின் இலங்கை விஜயம் நிகழ்ந்தது. 'மாக்ஸிச' சாமியார் என்று அழைக்கப்பட்ட ஆதீனகர்த்தர் அவர். அவரை இந்துக் கல்லூரிக்குப் பேச அழைக்கக்கூடாது என்பதில் மரபில் ஊறிய தமிழாசிரியர் சில உறுதியாய் இருந்தனர்.

பிரச்சினை அதிபர் ஆசைப்பிள்ளையிடம் சென்றது. என்ன செய்வது என்று ஆராயக் கூட்டப்பட்ட கூட்டத்தில் அதிபர் சிவராமலிங்கம் மாஸ்டரைப் பார்க்கிறார். 'என்ன செய்யலாம் நீர் சொல்லும்' என்று கேட்க சிவராமலிங்க மாஸ்டரிடம் இருந்து வார்த்தைகள் துள்ளி வந்தன. 'சேர், எங்கடை சிவபெருமான் முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருள் பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப்பெற்றியன். அவனை எந்தப் புரட்சியாளர்களாலும் மாசுபடுத்த முடியாது. அடிகளார் வந்து பேசட்டும். அவரது புரட்சிக் கருத்துக்களுக்குச் செவி கொடுப்போம்' ஆசிரியரின் கருத்து உடனடியாக ஏற்றுக் கொள்ளப்பட குன்றக்குடி அடிகளாரின் யாழ்.இந்து விஜயம் நிகழ்ந்ததாய் கூறுவார்கள். மரபில் அசையாது நின்று புதுமையை ஏற்கும் புரட்சியாளர் எங்கள் சிவராமலிங்கம் மாஸ்டர்.

இந்தத் தனித்தன்மைகள் தான் பிறநாடு சென்ற மாணவர்கள் பலகாலம் சென்றும் அவரை மறக்காததற்கான காரணங்கள். தந்தைகளாகவும் பாட்டாக்களாகவும் ஆகிய விட்ட இவரின் பழைய மாணவர்கள் இளைஞர்களாய் விமான நிலையத்தில் கூடி நின்று ஆசையோடு அவரை வரவேற்றனராம். பழைய மாணவர் சங்க விழாவில் ஆசிரியரைக் காணவென பெருங்கூட்டம் கூடியதாம். 80 வயதிலும் கடல் கடந்து தம்மைத் தேடிவந்த ஆசிரியரைக் கண்ணீரால் நனைத்து மகிழ்ந்தனராம். மாணவர்கள், ஆசிரியர் மேடையில் பேசும்போது 'நீண்ட நாட்களின் பின் உங்களைச் சந்திக்கிறேன். இது முதல் சந்திப்புத்தான். இன்னும் பலதரம் உங்களைச் சந்திக்க வருவேன்" என்று கூற, அந்த 80 வயது இளைஞனின் தன்னம்பிக்கை கண்டு கண்ணீர் மல்க ஆரவாரித்ததாம் சபை.

இந்த வயதில் லண்டன் சென்று தமிழைக் காத்து திரும்பியிருக்கிறார். மாணவர்கள் ஆசிரியருக்கு லண்டனைச் சுற்றிக்காட்ட விரும்பியிருக்கிறார்கள். 'எதையெல்லாம் பார்க்கப்போகிறீர்கள்'. மாணவர்களின் கேள்விக்கு ஆசிரியரிடமிருந்து வித்தியாசமான பதில் பிறக்கிறது. 'எனக்கு வேறொரு இடமும் பார்க்கத் தேவையில்லை. திருவாசகப் பாதிரியார் G.U போப்பின் சமாதியை வணங்க வேண்டும். அது மட்டுந்தான் என் ஆசை' ஆசிரியரின் விரும்பம் கேட்டு ஆச்சரியப்பட்டு மாணவர்கள் அங்கு அவரை அழைத்துச் செல்கிறார்கள். கொட்டும் பனியில் சமாதியைத் தொட்டு தண்ணீர் மல்க வணங்கிய ஆசிரியர் 'இங்கு ஒரு தெலுங்குத் தமிழ் மாணவன் துயில்கிறான்' என்ற வாசகமடங்கிய பாதிரியாரின் சமாதிப் பலகையைத் தேடுகிறார். போப் பாதிரியார் இறக்கும்போது தன் சமாதியில் அமைக்க, மேற்சொன்ன வாசகத்தை எழுதி வைத்தாராம். அவ்வாசகம் அடங்கிய சமாதிப்பலகை தொலைந்திருந்தது. ஆசிரியர் நெஞ்சில் பெரும்கவலை. மீண்டும் அந்தப்பலகை இங்கே பொருத்தப்பட வேண்டும் என்ற தன் விருப்பத்தைத் தெரிவிக்கிறார். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் அப்பொறுப்பை ஏற்றுக் கொண்டது. கடல்கடந்து வந்து தமிழை நேசித்தவரின் விருப்பத்தை கடல் கடந்து சென்று நிலைநிறுத்தச் செய்து திருப்பியிருக்கிறார் எங்கள் ஆசிரியர்.

இந்த 80 வயது இளைஞனின் வாழ்வு இனிவரும் தலைமுறைக்கு நிச்சயம் ஓர் எடுத்துக்காட்டு.

**மீள் பிரசுரம்**

**அமரர் க. சிவராமலிங்கப்பிள்ளை அவர்கள்**

**2000ம் ஆண்டு எழுதிய**

**ஓர் வரலாற்றுக் குறிப்பு**

## யாழ். இந்துவின் ஆற்றுப்படையினர்....

(ஒரு பருந்துப்பார்வை)

திரும்பிப் பார்ப்பது ஒரு மகிழ்ச்சி. தனி மனித வாழ்விலேயே மகிழ்ச்சி தரும் ஒன்று ஒரு நூற்றாண்டுக்கு மேலாக அரும்பணியாற்றி ஆயிரம், அயிரம் அரும்பெற்ற புதல்வரை கலை உலகத்துக்குத் தந்த கலைக்கோட்டத்தின் வரலாற்று நாயகர்களைத் திரும்பிப் பார்ப்பது பெரு மகிழ்ச்சி தருவதாகும்.

ஆற்றுப்படையினராக அமைந்து கல்லூரியை வளர்த்த ஆன்றோர் வரிசை மிகநீண்டதொன்று, ஆரம்பத்திலிருந்து இன்றுவரை கல்லூரியின் ஆட்சிப் பொறுப்பைக் கல்விக்கும் தமிழ், கலைப்பண்பாட்டு விழுமியங்களின் காவலர்களாகவும் ஏற்றுக் கொண்டவர்கள் யாழ். இந்துவின் அதிபர்கள்.

இவ்வரி நெடும் புத்தகத்தில் ஒருசில பெருமக்களை நினைவு கூறுவதே இக்குறிப்பு.

இந்து உயர்நிலைப்பள்ளி - The Hindu High School என்ற பெயருடன் 1890 ஒக்டோபர் 23ம் திகதி நிறுவப்பட்டு 1895இல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியது.

தொடக்கத்தில் திரு கோட்மான் அப்பாப்பிள்ளை தலைமை ஆசிரியராக பணியாற்றினார். 1892இல் திரு நெவின்ஸ் செல்லத்துரை அதிபரானார். பாளையங்கோட்டையில் உயர்நிலைப் பள்ளியொன்றின் அதிபராக இருந்த இவரை திரு. பசுபதிச் செட்டியார் அவர்கள் பெருமுயற்சியினால் இந்துவின் அதிபராக்கினார். திரு. நெவின்ஸ் அவர்கள்

1892 தொடக்கம் 1902 வரையும் அதிபராகக் கடமை புரிந்தவர்.

சிறந்த கல்விமான், நிர்வாகி மட்டுமன்று, கல்லூரியின் வளர்ச்சிக்கு கால்கோள் செய்தவர். கிறிஸ்தவராக இருந்த போதும், ஆட்சிசபை தன் மீது கொண்டிருந்த விசுவாசத்தைப் மதித்துப் பணியாற்றிய பெருமகன். இவர் காலத்தில்தான் தொடக்கத்தில் கல்கத்தா பல்கலைக்கழகத்துடனும் இந்துக்கல்லூரியை இணைத்து பட்ட முதல் தேர்வுகளுக்கு மாணவர்களை தயார் செய்து வெற்றி கண்டவர்.

மேலாக இந்து இளைஞர் கழகத்தை இவரே அங்குரார்ப்பணம் செய்தவர். யாழ். இந்தவின் வரலாற்றில் தனக்கென ஒரு இடத்தை இவர் பெறுகின்றார். குறுகிய காலமானாலும் தன் கல்வித் திறனாலும் கேம்பிறிஜ் பல்கலைக்கழக உயர் பட்டமும் உயா கணிதத் திறனும் திரு. சஞ்சீவ இராவ் அவர்களை மாணாக்கர் மத்தியில் உதாரண புருடராக்கியதில் வியப்பில்லை. திரு. சஞ்சீவராவ் இங்கிருந்து நேரே காசிப்பல்கலைக்கழக கணக்கியர் பேராசிரியராகச் சென்றார்.

திரு. W.A. ருப் (Troupe) 1926-1927 அதிபர் பதவியேற்றார். சிவப்பு, பச்சை, மஞ்சள், ஊதா என்று நிறம் நிறமான மைப் பேனாக்களுடன் காட்சி தந்தவர் என்று என் ஆசிரியர்கள் பிரான் கே.எஸ்.எஸ். சொல்லக்கேட்டிருக்கிறேன்.

தொடர்ந்து ஒரு தென்னிந்திய அறிஞர் வெங்கட்ராமன் அவர்கள் பொறுப்பேற்றார். 1928முதல் 1933வரை சேவை செய்தார். நிறைந்த ஆங்கிலப்புலமை மிக்கவர் சிறந்த பக்தர் என்றும் என் ஆசிரியர்கள் சோல்லக் கேட்டிருக்கின்றேன்.

தினமும் மாலைப் பூசை நேரத்திற்கு வண்ணை சிவன் கோயிலுக்குப் போய் பிரதட்சணம் செய்யும் வழக்கமுடையவராம்.

ஒரு நாள் ஏதோ காரணத்தினால் நேரம் பிந்திப் கோயிலுக்குச் சென்றாராம். கோயில் திருக்காப்பு செய்து விட்டார்கள். வெங்கட்ராமன் தனது நியதியிலிருந்து தவறாமல் கே.கே.எஸ் வீதி கோணத் தோட்டம், வெள்ளத்தெரு, வைத்தீஸ்வரன் வீதி

வழிபட்ட மூன்றாம் பிரகாரத்தை மும்முறை வலம் வந்தாராம்.

அடுத்த நாள் செய்தி தெரிந்த கோயில் அறங்காவலர் 'அதிபர் வெங்கட்ராமன் வந்து வழிபட்டுப்போன பின்பே திருக்கதவு சாத்தப்படவேணும்' என்று உத்தரவு போட்டாராம்.

இவரது ஆங்கிலப்புலமையை இனிக்க பேசி மகிழ்வார் என ஆசிரியர் கறுத்த வெள்ளையர் திரு. A.V. மயில்வாகனம்.

திரு. வெங்கட்ராமனிடமிருந்து நிர்வாகப் பொறுப்பை ஏற்று 1933 தொடக்கம் 1952வரை ஆட்சி புரிந்தார். திரு. A. குமாரசுவாமி கல்கத்தாப் பல்கலைக்கழகத்திலும், இலண்டன் பல்கலைக்கழகத்திலும் உயர்கல்விபெற்று வழக்கறிஞராகவும் (Bar-At-Law) உயர்ந்தவர்.

துணிச்சலான நிர்வாகி, சோதனைகள் செய்வதும் வெற்றியீட்டுவதும் தனித்துவம். ஆண்கள் கல்லூரியாக இயங்கிய இந்துக்கல்லூரியின் தோற்றத்திற்கு வித்திட்டு, பயன்தரு தரு விருட்சமாக்கிய சான்றோன்.

நல்லைக் கந்தன் அடி நாளும் பரவும் பக்தன், கடமையில் இருக்கும்போதே அவன் திருவடி மருவிய மாண்பாளர். திரு. குமாரசுவாமி உப அதிபராகக் கடமையாற்றிய கணிதமேதை.

V.M. ஆசைப்பிள்ளை 1963வரை அதிபர் ஆசனத்தை அலங்கரித்தவர். இவரை யாரும் கோயில் குளத்தில் கண்டதாக வரலாறில்லை. இருந்தும் பெரும் பண்பாளர். தான் இந்துக்கல்லூரியில் அதிபர் என்பதை முற்றும் அறிந்து கடமை புரிந்தவர்.

இவர் காலத்தில் பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து வெற்றி கண்டவர். வழிதவறிய அதிகாரத்திற்கு என்றும் மசிந்து கொடுக்காதவர். கல்லூரியின் விவகாரங்கள் கல்லூரியோடு என்ற வரம் காத்தவர். அயர்ந்து, மறந்து வீட்டில் சந்திக்கும் போது கல்லூரி சம்பந்தமான பேச்சு எழுப்பப்பட்டால் கதையை மாற்றும் லாவகம் இவர் ஒரு இராச தந்திரியாக இருக்கலாமே என்று எண்ணத் தோன்றும் ஒரு கனவான். A through Gentleman.

1963ல் திரு. C. சபாரத்தினம் அதிபரானார். பழையமாணவன், சிறந்த கணித ஆசான், கழிவு கட்டை என்று மற்றோர் கழித்துவிட் பேர்களும் கணிதம் தெரிய வைத்தவர். செருமலாலும், நக்கல் சிரிப்பாலும் அடங்காத காளைகளை அடக்கி அறிவூட்டியவர்.

அதிகம் பேசமாட்டார். A man of few words. மெய்வல்லுனர் பல்கலைக்கழகக் கல்லூரியில் விருது பெற்றவர்.

மறக்க முடியாத ஒன்று கே.கே.எஸ். வீதியில் உள்ள தேனீர் கடைக்கு களவாகப் செல்லும் களவொழுக்கத்தைக் கற்பொழுக்கமாக்கியவர். கல்லூரியிலேயே ஒரு சிற்றுண்டித் தொழிற்சாலையை அமைத்து எல்லோர் தாகத்திற்கும் தீர்வு கண்டவர்.

C.Saba தொடர்ந்து பொறுப்பேற்றவர் N. Saba இவைகள் செல்லப்பெயர்கள். திரு. N. சபாரத்தினம் யாழ் இந்துவின் பழைய மாணவன், ஆசிரியன், உப அதிபர். 1964 தொடக்கம் ஏழு ஆண்டுகள் அதிபராகச் சேவையாற்றியவர்.

ஆங்கிலவாணியின் அருட்கடாசம் நிறையப் பெற்றவர். தமிழ் சமய ஆவலர், சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரனாரினதும் அறிஞரும் காந்தியவாதியுமான வறண்டி பேரின்ப நாயகத்தினதும் மாணவன்தான் என்பதில் பெருமை கொள்வார்.

இவர் காலத்தில் தான் சேக்கிழார் மன்றம், இலங்கைக்கம்பன் கழகம் என்பவை போன்ற இந்துக் கல்லூரி தொழுவாய் அமைத்த பெருமை பெற்றது.

N. Saba என் மொழிவன்மையால் ‘கேளாதாரும் கேட்டார்கள்’ ஆசிரியர்களாகிய எம்மில் சிலர் விட்ட தவறுகளை உயர் அதிகாரிகள் கண்ட போதெல்லாம் தன் சொல் வளத்தால் காணதவாறு செய்து காத்தவர் திரு. என் சபாரத்தினம்.

திரு.N.சபாரத்தினம் ஓய்வுபெற திரு. M.கார்த்திகேயன் Performing அதிபராக 1971ல் பதவி ஏற்றார்.

ஏறக்குறைய ஒரு ஆண்டுகாலம் ‘காந்தி’ பதவி வகித்தாலும் அக்காலப்பகுதி ‘நாம் எல்லோரும் அதிபர்கள் தானே’ என்று நிமிர்ந்து நின்ற காலமாகும்.

பொதுவுடமைவாதியாக இருந்த போதிலும் கடமை, கட்டுப்பாட்டில் இம்மியும் விலகாத்திறலோன்.

சார்புமுலாம் கண்டு மிரண்ட அரசு காத்தியை நிலை கொள்ள விடாமை புதினமன்று.

பழைய மாணவனாய் விளையாட்டு மைதானத்தில் விருதுகள் பல பெற்று புகழ் தந்த திரு. இ. சபாலிங்கம் 1971ல் பொறுப்பேற்று 1975வரை அதிபராய் அலங்கரித்தார்.

இவருடைய ஆட்சிக்காலம் சிக்கல் நிறைந்த காலம், பொருட்கள் அருமை, விடுதி நடாத்துவதே ஒரு சவாலாகிய காலம், மாணவரிடையே குழப்பங்கள் தோன்றி வளரத்தொடங்கியது.

இக்காலத்தில் ஒரு ஆளுமையுடன் கூடிய நெறியாள்கை வேண்டப்பட்டது. எல்லா வகையிலும் பொருத்தமுடையவராக திரு. இ. சபாலிங்கம் விளங்கினார்.

1975இல் திரு. சபாலிங்கம் அவர்களிடமிருந்து கல்லூரியைப் பொறுப்பேற்றார். திரு. பி.எஸ். குமாரசுவாமி, அரிச்சுவடி தொடக்கம் பல்கலைக்கழகம் புகுமுக வகுப்பு வரைவேறு பள்ளி தெரியாத இந்துவின் மைந்தன்.

காலை 7.30 தொடக்கம் மாலை 7மணிவரை கல்லூரியிலும் விளையாட்டு மைதானத்திலும் இரண்டறக் கலந்து நின்றவர். இப்பழக்கம் அதிபரான பின்பும் புதுப்பிக்கப்பட்டதால் 'படபஸ்' என்ற செல்லப் பெயருக்கு உரித்தானவர்.

சிக்கல்கள் முற்றிய காலத்தும் தளராமல் செயலாற்றியவர். எப்போதும் மாணவர் பக்கமே நின்றவர். இதனால் எங்களால் Boysprincial என்ற பெயர் பொறிக்கப்பட்டது.

இவர் காலத்தில்தான் யாழ். இந்துக்கல்லூரி யாழ். குடாநாட்டின் சிறந்த கல்லூரியாகவும் திரு. பி.எஸ் குமாரசுவாமி சிறந்த அதிபராகவும் கல்வித் திணைக்களத்தால் விதிப்புரை செய்யப்பட்டது.

தொடர்ந்து அதிபர்களாக திருவாளர்கள் எஸ் பொன்னம்பலம், கே.எஸ்.குகதாஸ்சன், அ.பஞ்சலிங்கம், அருளானந்தம் ஆகியோா் கல்லூரியின் பழைய மாணவர்களே.

இவர்களும் பல பிரச்சனைகளை எதிர் கொண்டவர்கள். திருவாளர்கள் பொன்னம்பலமும் குகதாசனும் கல்லூரியின் 100ஆண்டு விழாவை செவ்வனே நிகழ்வித்து மலர் ஒன்றையும் வெளியிட்டனர்.

இன்றைய அதிபர் திரு. ஏ.சிறிக்குமாரன் பழைய மாணவன். காலத்துக்கே உரித்தான சவால்களை இன்முகத்தோடு எதிர்கொண்டு இன்முகத்தோடு செயற்படுகின்றார்.

ஒப்பிட்டு ரீதியில் இளைஞன், மும்மொழிவல்லுனன் அடக்கமும், ஆளுமையும் கொண்டவர். கல்லூரித்தாயின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி வெற்றிகாண வாழ்த்துவோம்.

உயர்ந்த மாளிகைகள் அதிகம் இல்லை. கற்சுவர்களும், கூரைகளும் கல்லூரியாவதில்லை குடிசைகளே பல்கலைக்கழகங்களாக கலைபல பயிற்றியமை எமது பண்டைய வரலாற்றுப் பாரம்பரியம்.

இந்துக் கல்லூரியின் பலமெல்லாம் அவள் சேவையாளரின் செம்மைசால் நெஞ்சங்களே.

We are poor but is greatness in our poverty. The greatness is the devoted service of the principals and the an children both old and new.

அன்னையே உன் மண்ணை முத்தமிட்டு வணங்குவோம்.

# எமது நன்றிகள்

மிகவும் குறுகிய காலத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்விற்கு பல இந்துக்கல்லூரி நண்பர்கள் பல வழிகளிலும் கஷ்ரப்பட்டு உழைத்துள்ளார்கள்.

குறுகிய காலத்தில் தமது அனுபவங்களை இந்து இளைஞனில் பதிவு செய்துகொண்ட நண்பர்கள்

மண்டபம் தந்துதவிய லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய நிர்வாகிகள்

ஆலோசனை வழங்கிய நண்பர்கள்

தட்டச்சு உதவிசெய்த நண்பர்கள்


விளம்பரப்படுத்திய நிறுவனங்கள்

அச்சுப்பதிவு செய்த Print Tone நிறுவனம்


நிகழ்வு ஒழுங்கமைப்புக்கு பல வழிகளிலும் உதவிய நண்பர்கள்

அனைவருக்கும் இந்து இளைஞனின் நன்றிகள் உரித்தாகுக.

**- நன்றி -**



2004ம் ஆண்டில் அன்னாரின் இங்கிலாந்து விஜயத்தின்போது


















இந்து இளைஞன் (ஐஇ) உலகெங்கும் பரந்து வாழும் இந்துக்கல்லூரி பழைய மாணவர்கள், கல்லூரி சார்ந்தவர்களின் உணர்வுகளை மட்டுமல்லாது இந்துக்கல்லூரியின் இன்றைய மாணவர்களின் பிரதிபலிப்பையும் உள்ளடக்கிய ஊடகமாக ஐக்கிய இராச்சியத்திலிருந்து வெளிவருகின்றது'

இந்து இளைஞன் (ஐஇ) 2004










உங்கள் படைப்புகள் இடம் பெறுவதற்க்கும் கருத்துக்களை எடுத்துரைக்கவும்


*தொடர்புகளுக்கு:*

மணிவண்ணன் 020 8422 7296
பிரதாபன் 079 3175 3610
சீலன் 079 4054 0279
younghinduuk@yahoo.co.uk


Design & Printed by: Print Tone T: 020 8552 0299